Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஸூ சித்திரை மீ 29-ம் உ | புதன்கிழமை | (11 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 14 | ஓசை 52

## ஹெல்மட் மாற்றத்தினால் இருப்பவர் இறந்ததற்கான நஷ்டஈடு பெற்றார்!

(கெய்ரோ)

'ஹெல்மெட்' மாற்றும் வழக்கம் இலங்கையில் மட்டுமல்லாமல் எகிப்திலும் பழக்கத்திலுள்ளதாம். பத்து மாதங்களுக்கு முன் சவுதி அரேபியாவில் விபத்து ஒன்றில் அகாலமரணமடைந்ததாக எகிப்து நாட்டைச் சேர்ந்த அப்துல் அஸீஸ் குடும்பத்துக்கு 6,000 டாலர் நஷ்ட ஈடாக அனுப்பப்பட்டுள்ளது.

அப்துல் அஸீஸ் சவுதி அரேபியாவில் சமய ஆசாரப்படி கவுறாடியில் புதைக்கப்பட்டுவிட்டார் என்ற அத்தாட்சிப் பத்திரமும், அவரது தனிப்பட்ட பாவனைப் பொருட்களும், 25,000 சவுதி ரியால்களும் தனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இறந்துவிட்டவர் என்று கருதப்படும் அப்துல் அஸீஸ் கெய்ரோவில் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

அஸீஸ் சுமார் பத்து மாதங்களுக்கு முன் தன் பாஸ்போட்டைத் தொலைத்துள்ளார். பாஸ்போட்டில் தலையை மாற்றி வேறொருவர் (8ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இதுவரை 22 பேருக்கு எயிட்ஸ்

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை இருபத்திரண்டு பேருக்கு ஆட்கொல்லி நோயான எயிட்ஸ்நோய் பிடித்துள்ளது என புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து இன்றுமுதல் கிராமங்கள் தோறும் எயிட்ஸ்நோய்க்கு எதிரான இயக்கமொன்றை இலங்கை குடும்பத்திட்ட சங்கம் மேற்கொண்டுள்ளது.

லண்டனில் உள்ள சர்வதேச குடும்பத்திட்டச் சங்கத்தின் ஏற்பாட்டின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

எழுபத்தொரு தொண்டர்கள் நூற்றி முப்பத்தொரு கிராமங்களில் எயிட்ஸ் பற்றி பிரசாரங்களில் ஈடுபடவுள்ளனர்.

# முக்கிய பிரச்சினைகளில் அரசு - புலிகள் உடன்பாடு!

(கொழும்பு)

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தலைமையிலான இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு. கோபால்சாமி மகேந்திரராசா தலைமையிலான விடுதலைப்புலிகளுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாவது கட்டப் பேச்சுக்கள் கொழும்பில் நேற்று நள்ளிரவுவரை நடை பெற்றது. சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளில் வடக்கு கிழக்கு மாகாணத்தை எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளில் உடன்பாடு காணப்பட்டதாக அறியப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நீதிஅமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினா மற்றும் அதிகாரிகளும் இருந்தனர். திரு. மகேந்திரராசாவுடன் திரு. ஜோகரத்தினம் யோகி, திரு. சுரேஷ், கலாநிதி அன்ரன் பாலசிங்கம், கிழக்கு மாகாணப் பொறுப்பாளர்கள் ரூபன், கரிகாலன் காஸ்ட்ரோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்புக்கு வந்த மக்கள் முன்னணிக் குழுவினர் அன்றிரவு நீதி அமைச்சர் ஜனாப் ஏ.ஸி.ஏஸ். ஹமீதுடன நள்ளிரவுவரை பல பிரச்சினைகள் பற்றிக் குறிப்பாக கிழக்கு மாகாணப் பிரச்சினைகள் பற்றி பேசினர்.

நேற்றி முற்பகல் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்கள் பற்றி அமைச்சர் ஹமீத்துடனும் முப்படைத் தளபதிகள் உயர் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடைபெற்றன.

நேற்றிரவு பத்துமணியள (8-ஆம் பக்கம் பார்க்க)

## வடிசாராயப் பார்சல்கள் புலிகளால் பிடிக்கப்பட்டது

(வவுனியா)

வவுனியாபகுதியில் 'ஸொபிங்' பைகளில் நிரப்பப்பட்டு, கடதாசியினால் பொதிகட்டி விற்பனைக்கு கொண்டு சென்ற பத்து வடிசாராயப் ''பார்சல்கள்'' விடுதலைப் புலிகளிடம் சிக்குப் பட்டுள்ளது.

இச்சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்தது

அரைக் கிலோகிராம் சீனி அளவிலான பத்து வடிசாராய பொதிகள் பை ஒன்றிற்குள் வைத்துக் கொண்டு செல்லப்பட்ட போதே சிக்குப்பட்டது.

மேற்படி பொதிகளைக் கொண்டு சென்றவர் விடுதலைப் புலிகளினால் விசாரணைக்குட் படுத்தப்பட்டு வருகிறார்.

இதேசமயம் விடுதலைப் புலிகளினால் கசிப்பு உற்பத்தியும் பாவனையும் தடை செய்யப் (8ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்பிரல் 20இல் பொலிஸ் நேர்முகப் பரீட்சை!

(யாழ்ப்பாணம்)

ரிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள்கள், ரிசேர்வ் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்கள், ரிசேர்வ் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோருக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 20 ஆம் திகதி முதல் நடைபெறும் என யாழ். பொலிஸ் சுப்பிரின்டன் தெரிவித்துள்ளார்.

இந்த நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்களும் சான்றிதழ்களுடன் சமூகமளிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடைபெறும் இந்த நேர்முகப்பரீட்சையை நடாத்த விசேட குழுவும் கொழும்பிலிருந்து வரவுள்ளது.

இதேசமயம் நிரந்தர பொலிஸ் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## கொழும்பு, திருமலைத் துறைமுகங்கள் அபிவிருத்தி

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகமும், திருக்கோணமலைத் துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகக் கப்பற்றுறை துறைமுகங்கள் அமைச்சர் ரூபா கருணாதிலக தெரிவித்துள்ளார்.

நாட்டின் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது எனவும் அவர் சொன்னார்.

காலித் துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது இதனால் கப்பல்கள் எந்தவொரு துறைமுகங்களிலும் நேரத்தை வீணாக்காமல் (8ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது

## தமிழ்நாட்டில் 3 விபத்துக்கள் எட்டுப்பேர் இறப்பு

(புதுடில்லி)

தமிழ் நாட்டில் தனித்தனியாக நிகழ்ந்தமூன்று விபத்துக்களில் மொத்தம் எட்டுப்பேர் உயிர் இழந்தனர். ஆயமிலக் மாவட்டம் செட்டியார் சத்திரத்திற்கு அருகே இரண்டு பேருந்துகள நேற்று முன்தினம் மோதியதில் மூன்று பேர் உயிரிழந்தனர் ஒன்பது பேருக்கு காயம் ஏற்பட்டுள்

றுகொண்டிருந்த அரசுப் போக்குவரத்துப் பேருந்து ஒன்றும் மோதியதாலே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

கோயம் புத்தூருக்கு அருகே நீலாம்பூரில் தேசிய நெடுஞ்சாலையில் கார் ஒன்றும் லொறியொன்றும் மோதியதில் இரண்டுபேர் உயிரிழந்த

நாட்டின் துறைமுகங்களை

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட ரீதியாக கடற்றொழிலை விருத்தி செய்ய அமைச்சர் முடிவு

(கொழும்பு)

நாட்டில் மாவட்டரீதியாக மீன் பிடித்தொழிலை அபிவிருத்தி செய்யப் போவதாக புதிய கடற்றொழில் அமைச்சர் யோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் மீன்பிடித்தொழிலையும், நன்னீர் மீன்பிடித்தொழிலையும் விருத்தி செய்ய அரச, தொண்டர் நிறுவனங்களின் உதவிகளும் பெறப்படவுள்ளது.

இதற்காண பணிகளை மாவட்ட கடற்றொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த உத்தியோகத்தர்களுககு விரைவில் பயிற்சியளிக்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## தொலைபேசிகள் விரைவில் சீராகிவிடுமாம்!

(கொழும்பு)

1995 ஆம் ஆண்டுக்கு முன்னதாக நாட்டிலுள்ள சகல தொலைபேசி பாவனையாளர்களினதும் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான திட்டங்கள் தற்போது வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு பிராந்திய தொலைத்தொடர்பு அபிவிருத்தித் திட்டம், அம்பாந்தோட்டை தொலைத்தொடர்பு அபிவிருத்தித்திட்டம், பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டம் என்பன பூர்த்திசெய்யப் பட்டதும் மேலும் ஒன்பது பகுதிகளுக்கு நேரடித் தொலைபேசி வசதிகள் வழங்கப்படும்.

### இவ்வாண்டு

## காத்தான்குடி பிரதேசத்தில் 600 வீடுகள் கட்டப்படும்

(காத்தான்குடி)

புனர்வாழ்வு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் பதினையாயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்தின் கீழ், காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாண்டு அறுநூறு வீடுகள் கட்டப்படும்.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சமீபத்திய வன்செயல்களின்போதுபாதிக்கப்பட்டவர்களின் பதிவேடுகளைப் பேணுவதிலும், ஒழுங்குப்பட்டியல் தயாரிப்பதிலும் கிராம உத்தியோகஸ்தர்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேச்சில் திருப்தி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டம் ஒழுங்கு இப்பொழுது சீரான முறையில் கடைப்பிடித்துப் பின்பற்றப் பட்டு வருகிறதென்பதில் அரசாங்கமும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் நேற்றுப் பகல் சந்தித்துப் பேசிய பொழுது திருப்தி தெரிவித்துக்கொண்டனர்.

நேற்று முற்பகல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தரப்பில் நீதி அமைச்சரும் வடக்கு கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனிவிரத்தினா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணத்துங்க முப்படைத் தளபதிகள் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மின் கட்டணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து மின்சார சபை தனது கட்டணங்களை அதிகரித்துள்ளதால் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் ஏப்பிரல் முதலாம்திகதி தொடக்கம் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது போலவே யாழ். மாவட்டத்திலும் மின் சாரக்கட்டணம் குறிப்பிட்ட அளவுஅதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் மின் சாரத்தை கிக்கனமாகப்பயன்படுத்துமாறும் இதனால் வாழ்க்கை செலவை கட்டுப் படுத்தலாம் என யாழ் மாநகர சபை ஆணையாளர் வேண்டிக்சொள்கிறார். (லோ)

## சண் பத்திரிகைச் செய்திக்கு டோமினிக் மறுப்பு

(கோண்டாவில்)

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப பெறும் வகையில், இந்திய அரசின் உதவியைப் பெற்றுப்போராட்டத்தைத் தொடருவோம் என்ற அர்த்தத்தில் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரியாகிய சண் ஏப்பிரல் 9, 1990 திகதிக் கோட்டில் முன்பக்கத்தில் ‘விடுதலைப் புலிகள் மீண்டும் இந்திய உதவியை நாடுகிறன’ என்ற தலைப்புச் செய்தி தொடர்பான பேட்டியைத் தான் தொலைபேசியிலோ அல்லது நேரிலேயோ வழங்கவில்லைஎன்று யாழ் மாவட்ட

(8ஆப் பக்சம் பார்க்க)

## மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் போராட்டத்தை நடத்துகிறோம்

(முல்லைத்தீவு)

‘‘நமது கடந்தகால வாழ்க்கைக்கும் தற்போதையவாழ்க்கைக்குமிடையில் வெவ்வேறு மாறுபாடுகள் தோன்றியுள்ளன. நாம் நம் தந்தைதாயாரின் அரவணைப்பு இன்றி போராட்டத்தையே இலட்சியமாகக் கொண்டு, மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் போராட்டத்தை நடத்திவருகின்றோம் என முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.கைலாஸ் கடந்த சனிக்கிழமை அன்று ஒட்டிசுட்டான் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின்ஆதரவில் அருணோதய அரங்கில் நடை

- கைலாஸ்

பெற்ற அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசும்பொழுது தெரிவித்தார்.

இவ் மாபெரும் விழா மௌனவஞ்சலியுடன் ஆரம்பமாகியது.

ஒடடிசுட்டான் வட்டாரப் பொறுப்பாளர் திரு. மீவணுவும் கலை, கலாசாரப் பொறுப்பாளர் திரு. சங்கரும் மங்கள விளக்கேற்றி வைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இவர்களுக்கு 200 ரூபா மேலதிகபடி

(தீவுப்பகுதி)

அரசாங்கத்தின புதிய சுற்றறிக்கையின்படி, வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இவ்வருட ஆரம்ப முதல் இருநூறு ரூபாய் மேலதிக

(8ஆம் பக்கம் பார்க்க)

ளது. திண்டுக்கலிலிருந்து பழனி சென்றுகொண்டிருந்த தனியார் பேரூந்துவும் பழனியிலிருந்து திருச்சி சென் தனர்.

செங்கை அண்ணா மாவட்டம் வேதநாராயண புரத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் வீட்டில் இராணுவ வீரர் கொள்ளை முயற்சி

(பாணந்துறை)

பேராசிரியர் ஒருவரிடமிருந்து ரூ 50,000 பணத்தை பயமுறுத்திப்பெற முயற்சித்த இராணுவத்தினர் ஒருவரை சென்ற ஞாயிறன்று பொலிஸார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர்.

பேராசிரியர் பொலிசில் செய்த முறைப்பாடு ஒன்றினைத் தொடர்ந்து சிவில் உடையில் மறைந்திருந்த பொலிஸார் பாணகொட முகாம் பீரங்கிப் படையைச் சேர்ந்த சிப்பாயை துப்பாக்யால் சுட்டுப் பிடித்த பின் கவலைக்கிடமான நிலையில் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனராம்.

முன்னொரு சமயம் பேராசிரியர் வீட்டில் இல்லாத சமயம், அவர் வீட்டுக்குச்சென்று வெளிநாட்டுப் பிரஜையாகிய பேராசிரியரின் மனைவியைப் பயமுறுத்தி விலையுயர்ந்த

(8ஆம பக்கம் பார்க்க)

## புகை பிடித்ததால் வருடம் 25 இலட்சம் பேர் இறப்பு

(சிட்னி)

உலகில் புகைபபிடிப்பதால் வருடம் தோறும் இருபத்தைந்து லட்சம் பேர் மரணமாகின்றனர் எனறு உலக சுகாதார ஸ்தாபன பணிப்பாளர் நாயகம் டாக்டர் கிரோஷி நட்வா சீமா அவுஸ்திரேலியாவில் கூறியுள்ளார்.

‘‘புகைப்பிடித்தலும் சுகாதாரமும் என்ற 7வது உலக மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

புகைப்பிடித்தல் பழக்கத்தை ஒழிப்பதற்கு அதிக ஒத்துழைப்பு எல்லோரிடம் இருந்தும் தேவைப்படுகிறது என வும் அவர் சொன்னார்.

புகைப்பிடித்தலுக்கு எதிரான நடவடிக்கைகளில் உலக சுகாதார ஸ்தாபனம் ஈடுபட்டு வருவதாகவும் அவர் சொனனார்.

## கோயில் திருவிழாவில் மோதல் பெண்கள் உட்பட 5 பேர் பலி

(புதுடில்லி)

காமராஜர் மாவட்டம் சாத்தூருககு அருகே இருக்கல்குடி என்ற கிராமத்தில இரு குழுககளுக்கிடையே நேற்றுமோதல் ஏறபட்டது. கோயில்திருவிழா தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து இந்த மோதல் ஏற்பட்டதாகவும் இதில ஒரு பெண்உட்படஐந்து போ கொல்லப்பட்டதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. மதுரையிலிருந்து பொலிஸ் படையினர் இக்கிராமத்திற்கு விரைந்துள்ளனர்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
M.G.M. 777 K.K.S. Road Jaffna.

மலிவு விலையில்
J.V.C GXN 70 வீடியோ கமறா, National G.I. ஜென்லொக் வீடியோ கமறா, Sunsui Vision mixer, 14" National Colour T V. ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் எவர்விஷன் 21, மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம். B. 747

லண்டன் Pitman Typing, Shorthand யூலை 90 பரீட்சைக்குத் தோற்ற விரும்புவர்கள் 14.04.90இற்கு முன்பு எம்மிடம் தொடர்பு கொள்ளவும். Bond Institutes 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். B 751

யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள DILKA WATCH WORKS, Opposite Bus Stand, Jaffna (குறிப்பு) சகல 'சீகோ' சிற்றின் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு (B-537)

முத்திரைச்சந்தி செம்மணி றோட்டில் 11/2 பரப்பு காணியும் சகலவசதியுள்ள வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் செ. த. அமலட்சுமி சேச் அருகில் முத்திரைசந்திநல்லூர் (R 154)


# எமது கல்வி வளர்ச்சிக்கு ரியூசன் முறை தவிர்க்க முடியாததா?

இலங்கையில் இன்று ரியூசன் கல்வி ஒரு பிரச்சனைக்குரிய விடயமாக உள்ளது. இக்கல்வி முறை அவசியமா? அவசியமற்றதா? என்ற வாதப்பிரதிவாதங்களும், பத்திரிகைகளில் பேட்டிகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர், அதிபர், கல்வித்திறனாளர்கள் அரசியல் வாதிகள் மட்டத்தில் கூட இது சர்ச்சைக்குரிய விடயமாகியுள்ளது. இவ்வேளையில் இதன்வளர்ச்சி, தற்போதைய நிலை, இதனால் ஏற்படக்கூடிய சமூகத் தாக்கங்கள், எதிர் காலத்தில் மேற் கொள்ள வேண்டியன பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டியுள்ளது. எந்த ஒரு விடயத்துக்கும் சாதகமாகவும் பாதகமாகவும் விவாதிக்க விடயங்கள் உண்டு. எனினும் சமூகத்துக்கு, நாட்டுக்கு என்ற பொதுக் கருத்தினுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது தனியார் சுதந்திரமும் அதற்குள் அடங்கிவிடுகின்றது. ஒரு நாட்டில் வாழும் ஒருவரின் சுதந்திரமும் உரிமைகளும் அந்நாட்டுக்களின் அபிலாசைகளுக்கும் தேவைகளுக்கும் மாறானதாக முடியாது. இன்று பேசப்படும் அல்லது பின்பற்றப்படும் சனநாயக சோசலிசக் கொள்கைகள் யாவும் நாட்டின் பெரும்பான்மை மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதைய கருத்தாகக் கொண்டுள்ளன.

எனவே இங்கு ஆராயப்படும் விடயங்கள் சர்ச்சைக்குரியனவானவை என்பதை உணர்ந்த நிலையில் இக்கட்டுரை எழுதப்படுகின்றது. இக் கருத்துகளுக்கு மாறான கருத்துக்கள் உள்ளன எனினும் கல்வி கேள்விகளில் வல்லவர்கள் என்று கூறப்படும் கல்வியாளர் சமூகம் இப்பிரச்சினையிலிருந்து ஒதுங்கியிருக்கின்றார்கள். என்பதுஉண்மை இந்த மௌனத்தைக் கலைக்க வேண்டியதும் இக்கல்வியின் தாக்கங்கள் பற்றி யாவரும் அறியச் செய்வதே முக்கிய நோக்கமாகும்.

## ரியூசன் கல்வி வரலாறு

இலங்கையின் கல்வி வரலாற்றில் ரியூசன் கல்வியின் தாக்கம் 1970 ஆண்டுகளிலேயே பிரபல்யம் பெறத் தொடங்கியது. அதற்கு முன்னரும் கல்வி முறையில் தனியார் கல்வி நிலையங்களிலும், வீடுகளிலும், ஆசிரியர், இளைஞர்கள், மாணவருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்தல் நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. விசேடமாக வகுப்பறைகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கும். ஆங்கிலக் கல்வியை வேண்டியோருக்கும், பாடசாலைகளில் உரியவயதுக்குப் பிந்திச்சேர்ந்தவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும்நோக்கிலும் நடைபெற்று வந்துள்ளது எனினும் பிற்காலத்தில் பல்கலைக்கழகங்களில் தாய்மொழிமூலமான படிப்புகள் முக்கியத்துவமும், அதிகளவில் சேர்க்கப்பட்டதும், பல்கலைக்கழகக் கல்விக்குப் போட்டிகள் அதிகரிக்கத் தொடங்கின. எனினும் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கும் மாணவர் தொகை ஒரு சில ஆயிரமாகவே மிகமந்த வளர்ச்சியிலேயே இருந்தது. இதற்கும் இலங்கையின் பொருளாதார மந்த நிலைாய சுட்டிக்காட்டப்பட்டது. குறைந்த தொகையினருக்கே அனுமதியளிக்கக் கூடியதாகவிருந்த நேரத்தில் போட்டியாளர் தொகை மிக அதிகமாகவிருந்தது.

இந்த நிலையில் இனரீதியான சிந்தனைகளும், மாணவர், அரசியல் வாதிகள் மட்டத்தில் பலபக்க நெருக்குதல்களால் வெளிக்காட்டப்பட்டன. இதனால் மொழி, இன, பிரதேசரீதியிலான தரப்படுத்தல்கள் தெரிவு முறைகள் பல வேறு வடிவங்களில் புகுத்தப்

பல்கலைக்கழகத்துக்கான மாணவர் தெரிவுக்கு க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகள் கவனத்துக்கு எடுக்கப்பட்டதால் அப்பரீட்சைகளும் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. அத்துடன் பாடசாலைக்கு வெளியே உள்ளோரும் ஜி.ஏ.கியூ, ஜீ.எஸ்.கியூ. பரீட்சைகளில் தேறினால் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட வாய்ப்புகள் அதிகரித்ததனால் பாடசாலையை விட்டு விலகியிருந்த மாணவர்களுக்குப் பாடசாலைகளுக்குப் புறப்பான நிலையங்களில் கல்வி பெறவேண்டிய தேவை ஏற்பட்டது.

வேண்டியிருந்ததாலும் மோட்டார் சைக்கில்கள், வாகன வசதிகளைக் கூட ரியூசன் நிறுவனங்கள் ஏற்படுத்திக் கொடுத்தன. இதனால் இவ் வியாபாரம் ஒரு சுறுசுறுப்பான தொழிலாகமாறத் தொடங்கியது.

தொடர்ந்து பல்கலைக்கழக விரிவுரையாளரை மட்டும் நம்பியிருப்பது ரியூசன் நிலைய ஒழுங்கமைப்பாளருக்கு இடைஞ்சலாகவும் இருந்தது. இதனால் பாடசாலையில் உள்ள அரசாங்க ஆசிரியர்களைப் பணத்தைக் காட்டி ரியூசன் நிலையங்களுக்கு அழைக்கப் பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பணத்தாசையால் பல அரசாங்க ஆசிரியர்கள் ஆரம்பத்தில் ஒளித்து நின்று மாலை நேரங்களில் ரியூசன் வழங்க ஆரம்பித்தனர். காரணம் அரசாங்க ஆசிரியர் வேறு

> **பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களுக்கு பகல் வேளைகளில் வெளியே வந்து கற்பிக்கக் கூடிய நேர வசதிகள் இருந்ததால் மாலைநேர வதப்புக்கள் யாவும் பகல்நேர வகுப்புக்களாக மாறின.**

இச் சந்தர்ப்பத்தில் சில பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தனிப்பட்ட முறையில் தனியார் வீடுகளில் கல்வி போதிக்கத் தொடங்கினர் இந்நிலையங்களில் விசேடமாக கலை, வர்த்தகப் பாடங்களே முக்கியத்துவம் பெற்றன. ஜி.எஸ்.கியூ. பாடநெறிக்குக் கொழும்பில் ஒரு சில நிறுவனங்களில் மட்டும் தனியான கல்வி வழங்கப்பட்டது. அக்காலத்தில் பயின்றோர்தொகை நூற்றுக்கணக்கிலேயே கூறக் கூடியதாகவிருந்தது. பல்கலைக்கழகங்களில் வழங்கப்பட்ட பாடக் குறிப்புகள் மீள்பிரதி செய்யப்பட்டு அல்லது தயாரிக்கப்பட்டு இந்நிலையங்களில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இம்முறையானது பாடசாலை மாணவர்களுக்கு எல்லாம் ஒரு புதிய கற்பித்தல் முறைபோலத் தெரியத் தொடங்கியது. பல்கலைக்கழகப் பேராசிரியர்களிடம் ரீயூசன் கற்பது பல்கலைக்கழகத்தில் கற்பது போன்ற ஒரு பிரமையை மாணவர் மத்தியில் ஏற்படுத்தத் தொடங்கியது. மேலும், பல்கலைக்கழகத் தெரிவுக்கான

தொழில் செய்வதானால் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இன்றேல் அது சட்டப்படி குற்றம் என்ற நிலை வழக்கில் இருந்தது. இதனால் இவ்வாசிரியர்களின் பெயர்களை விளம்பரங்களிலும், சுவரொட்டிகளிலும் அச்சிடுவது சிக்கலாக இருந்தது. இதனால் சட்டத்தைஏமாற்ற விளம்பரங்களில் அவ்வாசிரியர்களின் பெயர்கள் தகப்பன் பெயர் இன்றி வெளிவந்தன. பின்னர் சுருக்கமான பெயர்களாக வெளிவந்தன. அல்லது புனை பெயர்களாக வந்தன.

பின்னர் பின்னேர ஆசிரியர்கள் தமது பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும் ரியூசனுக்கு வரும் மாணவர்களின் நலன் கருதியும் பாடசாலை வேளைகளில் இடைக் கிடை லீவு போட்டு விட்டு ரியூசனுக்குப் போய் வந்தனர். இவர்களின் லீவுக்கேற்றபடி மாணவர் கல்வி பாடசாலையில் பாதிக்கப்படவே ஆசிரியர் மாணவரைத் தனது ரியூசன் நிலையத்துக்கு வரச் செய்து கட்டணமின்றிக் கற்பிக்கத் தொடங்கினர். அதே நேரத்தில் வெளி மாணவர்கள் கட்டணம் செலுத்

புறக்கவர்ச்சிகளுக்கும் அடிமையாகக் கூடியவர்கள். இதனால் ரியூசன் நிலையங்களின பெயர்களும் இலங்கைப் பல்கலைக்கழகங்கள், இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களின் பெயர்களாகவே வைக்கப்பட்டன. விசேடமாகப் பயிற்சிகளின் பெயர்களும் ஆங்கிலப் பெயர்களாகவே இருந்தன. இந்நிலையங்களில் கற்பது உண்மையிலேயே பல்கலைக்கழகங்களில் கற்பவர்கள் போன்ற பிரமையும், யாவரும் எம்.ஏ., பி.ஏ. பி.எஸ்.சி., ஐ.சி.எம்.ஏ. போன்ற உயர் பதவிகளை அடைபவர்களாகவும் எண்ணங்களையும் தோற்றுவித்தன. நீங்கள் பட்டதாரியாக வேண்டுமா? உடனே ஆறு மாதத்தில் ஆக்குகிறோம்- க.பொ.த. சாதாரணம் சித்தியடையவில்லையா! கவலையே வேண்டாம். உடனே வாருங்கள் என்ற ரீதியில் பத்திரிகை விளம்பரங்களும் அமைந்தன. இதனால் க.பொ.த. சாதாரணம் சித்தியடையாதவர்கள் பின்தங்கிய நிலையில் உள்ளோர், யாவரும் ரியூசனே கதி என்ற நிலைக்கு வந்து படையெடுக்கத் தொடங்கினர். அதே நேரத்தில் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர் எவ்வழி மாணவர் அவ்வழி என்ற முதுமொழிக்கிணங்க ஆசிரியரைப் பின்பற்றி லீவுகள் போடத் தொடங்கினர். சனி, ஞாயிறுகள் வகுப்பு, மாலை நேர வகுப்புகளாசின. க.பொ.த. உயர்தர வகுப்புக்களுக்சான போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகம் செல்வதே மனிதனுக்குக் கிடைக்கக் கூடிய ஆகக்கூடிய (சொர்க்கம்) முத்தி என்ற நிலையாக மாறத்தொடங்கியது. 1983 ஜூலை அண்டிய காலத்தில் உரிமைப் போராட்டங்கள் முதன்மை பெறத் தொடங்கவே அரச நிர்வாகங்களில் கட்டுப்பாடற்ற நிலை ஆரம்பித்தது. இதன் விளைவாக யாவரும் சட்டத்தைக் கையில் எடுக்கத் தொடங்கினர். யாவரும் நீதிபதிகளாகினர், தீர்ப்புகளை அவர்களே வழங்கினர். விளைவு ரியூசன் செல்லும் ஆசிரியரையோ அதிபரையோ அல்லது அதிகாரியையோ மாணவரையோ யாரும் கேட்க முடியாது என்றநிலை வளரத் தொடங்கியது. ரியூசனும் வளர்ந்தது. மேலும் தடை தாண்டல் ஓட்டம் போல தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியெய்துவோருக்கு பிரபல்யப்பாடசாலைகளில் அனுமதி என்ற நிலையும், க.பொ.த. உயர்தர வகுப்புக்குச் செல்ல தரங்கள் அடிப்படையாகத் தேவை என்ற நிலையும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட உச்சப் புள்ளி

(8ஆம் பக்கம் பார்க்க)


யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10.30, 2.30, 6.30
சிவகுமார்-சுஜாதா நடித்த
அன்னக்கிளி
(புதியபிரதி)

104 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
104 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)

ஈழநாதம்
மக்கள் தினசரியின்
புலோலியில் எமது
விற்பனையாளர்

தமிழ் வாழ நின்
உயிர் தந்த தாயே நீ
என்றும் வாழ்வாய்!
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
சுன்னாகம்
B/728

போர் வந்தே முத்தமிடும்

க. ஆறுமுகம்
**நாவலர் புத்தகசாலை**
புலோலி.

**VICKNA TUITIONCENTRE**
52, STANLEY ROAD, JAFFNA.
ஆசிரியர் - பொருளியல் -
**திரு. கலாகரன்**

**1990 AUG**
DAY - திங் புதன், செவ் - சென்மதிநிலுவை
செவ்வாய், வியாழன் - நிலைகோட்பாடு
வினா, விடையுடன்

**1990 AUG**
SAT + SUN பிரிவு I - அரசவரவுசெலவுதிட்டம்
பிரிவு II - சென்மதிநிலுவை

**1991 AUG**
SAT + SUN பிரிவு I - நெகிழ்ச்சிகோட்பாடு
பிரிவு II - கேள்வி கோட்பாடு

மு.குறிப்பு :- I வகுப்புகளுக்கான அனுமதிகள் முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
II வினாவிடை வகுப்புக்கள் இலவசமாக நடாத்தப்படும்.
(B/730)

தல்கள் தெரிவு முறைகள் பல வேறு வடிவங்களில் புகுத்தப்பட்டன. மேலும் அரச உத்தியோகங்களில் பட்டதாரிகளின் தேவைகள், மதிப்புகள், உயரத் தொடங்கியது. அத்துடன் பாடசாலைகளில் கல்விவாய்ப்புகளும் மாணவர்களுக்கு அதிகரிக்கப்பட்டன சனத்தொகை அதிகரிப்பும் குறிப்பிட்டளவு உயர்ந்து கொண்டு சென்றது. அவ்வேளையிலும் பல்கலைக் கழக அனுமதி எண்ணிக்கை உயர்வு மிக மந்தமாகவேயிருந்தது அவ்வேளையிலும் அதி மாணவரைச் சேர்த்துக் கொள்ளாமைக்கு கூறப்பட்ட காரணம் இலங்கையின் பொருளாதார நிலை இடம் தரவில்லையே என்பதாகும்.

இந்நிலையில் பல்கலைக் கழகத்துக்கான அனுமதி பற்றிய பிரச்சினைகள் பத்திரிகைகளிலும், அரசியல்வாதிகள் வாயிலும், பாராளுமன்றத்திலும் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகி மக்கள் மத்தியிலும் பிரபல்யம் அடையத் தொடங்கின. ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் வேலை நிறுத்தங்கள் நடாத்தப்பட்டன. இவை யாவும் பல்கலைக்கழகக் கல்வியின் முக்கியத்துவத்தைக் காட்டுவதாக அமைந்தன.

தொடங்கியது. மேலும், பல்கலைக்கழகத் தெரிவுக்கான பரீட்சையை இலக்காகக் கொண்டு கற்பித்தல் முறைகள் வினாவிடை வழங்கும் முறைகள், அச்சிட்ட புத்தகங்கள் பயிற்சிகள் வெளியிடல், சுவரொட்டி விளம்பரங்கள் எல்லாம் ரியூசன் பிரபல்யம் அடைய உதவின.

பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளருக்கு பகல் வேளைகளிலும் வெளியே வந்து கற்பிக்கக் கூடிய நேரவசதிகள் இருந்ததால் மாலை நேர வகுப்புகள் யாவும் பகல் நேர வகுப்புக்களாக மாறின. எனினும் மாணவர் தொகை அதிகரிக்கவே ரியூசன் நிலையங்கள் அதிகரித்தன. விரிவுரையாளர்கள் நேரங்களை மிச்சம் பிடிப்பதற்காகவும், பல நிலையங்களில் போதிக்க

அதே நேரத்தில் வெளிமாணவர்கள் கட்டணம் செலுத்திக் கற்றுக்கொண்டுவந்தனர். இதனால் ரியூசன் நிலையங்களில் மாணவர் தொகை மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. ரியூசன் வசப்பட்ட மாணவர்களோ பாடசாலைக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்றதாகக் கருதினர். அவர்களுக்கு ரியூசன் நிலையங்கள் வரப்பிரசாதமாக மாறின. மேலும் ரியூசன் நியையங்கள் மாணவரின் உளவியல் தேவைகளை நிறைவு செய்யும் நிலையங்களாகவும் மாறின. இது ஒருவகையில் கவர்ச்சிகரமான நிலையங்களாகவும் மாறத் தொடங்கின.

> **மாலை நேரத்தில் வகுப்பு நடத்திய பாடசாலை ஆசிரியர்கள் தமது பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும் ரியூசனுக்கு வரும் மாணவர்களின் நலன்கருதியும் பாடசாலைவேளைகளில் இடைக்கிடையே லீவு போட்டுவிட்டு ரியூசனுக்குப் போய்வந்தனர்.**

அத்துடன் மாணவர்கள் இலகுவில் எவ்விடயத்திலும் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள் என்பது போல விரைவில்

போர் வந்தே முத்தமிடும்
போதினிலே எம் வாழ்வு
ரத்தத்தில் நீச்சலிடும் தெப்பம் - ஈழ
யுத்தத்தில் உன் உயிர்
தானே கப்பம் தாயே!



LANKA (L.P.) காஸ்.
**த. தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ்**
133, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(B/525)

**அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக**

எங்களிடம் சகலவிதமான பால்மா, நவதானியம், சாய்ப்பு சாமான்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்குரிய L.P. காஸ்சிலிண்டரும்
பெற்றுக்கொள்வதற்கு இன்றே நாடுங்கள்:

**சிற்றி ஏஜென்ஸி**
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**சிற்றி ஏஜென்ஸி**
158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B-570)

# ஆத்திரமூட்டும் செயல்களை நிறுத்தி ஆக்கபூர்வமாகப் பேசவேண்டும்

## பாகிஸ்தான் பிரதமருக்கு ஐ. கே. குஜ்ரால் ஆலோசனை

(டில்லி)

பாகிஸ்தான் ஆத்திரமூட்டும் தனது செயல்களை நிறுத்திக் கொண்டு இருதரப்பு பிரச்சினைகளைப் பற்றி அர்த்தமுள்ள பேச்சுக்கள் நடத்துவதற்கு ஏற்ற சூழலைத் தோற்றுவிக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் கூறினார்.

பாகிஸ்தானிய பிரதம மந்திரி பெனாசிர் பூட்டோ ஆத்திர மூட்டும் வகையில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என்றுகூறிய ஐ. கே. குஜ்ரால் இதனை நிறுத்தி அயல் நாடுகளுடன் சுமூகமான உறவுகளைவளர்க்க வேண்டும் என வற்புறுத்தினார்.

நேற்று லோக் சபாவில் நடைபெற்ற வரவு செலவு திட்டவிவாதத்தின் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் இவர் குறிப்பிடுகையில் பாகிஸ்தானுடன் ஆக்க பூர்வமான ஒத்துழைப்பைதாம் ஏற்படுத்த விரும்புவதாக கூறினார்.

பகைமைப் போக்கும் போர் முழக்கமும் தேசிய முன்னணி அரசின் வழக்கமல்ல என்று குறிப்பிட்ட இவர் அரசின அடிப்படையான வெளியுறவு கொள்கையை குறிப்பிட்டு அயல் நாடுகளுடன் குறிப்பாக நேபாளத்துடனும் இலங்கையுடனும் உறவுகளை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்யப் போவதாக கூறினார்.

இந்திய சீன உறவுகளை பற்றிக் கூறிய அவர் பரஸ்பரம் டேணும் நலன்களை ஒட்டி எல்லைப் பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்படும் என்றார்.

## இன்று துணிந்தது போல் பெனாசிர் அன்று துணியவில்லை

(புதுடில்லி)

காஸ்மீரில் தலையிடும் இஸ்லாமாபாத் மீது கடும் நடவடிக்கை' எடுக்குமாறு இந்திய பாரளுமன்ற எதிர்க் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதம மந்திரியுமான ராஜீவ் காந்தி சனியன்று தெரிவித்தார.

இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் காஸ்மீரில் நிழும் முஸ்லிம் தீவிரவாதிகளின் வன்முறைப் போராட்டங்களுக்கு எதிராக வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசு நடவடிக்கை எடுக்க முடியாமல் ஊசலாடுகிறது என்று ராஜீவ் பிரதம மந்திரி வி பி சிங்கைச் சாடினார்.

இந்தியாவில் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுமளவிற்கு நியூ டெல்லியிலிருந்து பாகிஸ்தானுக்கு போன செய்தி யாது? என்று ராஜீவ் இந்திரா காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கேட்டதாக பிரி ஐ செய்தித் ஸ்தபானம் அறிவித்தது.

இன்று பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ கதைப்பது போல், நவம்ரில் தான் தேர்தலில் தோற்கு முன்பு அவர் கதைப்பதற்குத் துணியவில்லை என்றும் 1987 ஜனவரியில் இரண்டு நாடுகளும் நேர்ோட்டில் சந்தித்தன வென்றும், பாகிஸ்தான் தலைவர்களின்குரல் தொலைபேசியில் தழுதழுத்தது என்றும் ராஜீவ் காந்தி தெரிவித்தார்

## குட்டிக்கண்ணனின் நினைவு அஞ்சலிக் கூட்டம்

(நெடுந்தீவு)

'தியாகிகளும். வீரர்களும் சிந்திய இரத்தத்தால் இன்று நமது மண்ணில் ஒரு விடிவின் ஒளி தோன்றி வருகிறது. அது நிரந்தரமாக எமது மண்ணில் ஒளிர்ந்திட... நாம்

இவ்வாறு நெடுந்தீவு மத்தியில் நடைபெற்ற தியாகி குட்டி கண்ணனின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதித் தோழர் திரு. எஸ். நரேஷ் தெரிவித்தார்

### பஸ் கட்டணம் அதிகரிப்பு

(கல்லாறு)

மட்டக்களப்பு ரயில் நிலையத்திற்கு கல்லாறிலிருந்து அதிகாலை சேவையாற்றும் மினிபஸ்கள் அதிகமாக கட்டணம் அறவிடுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்துச்சபை பஸ்கள் மட்டக்களப்பு கல்லாறுக்கு 5-25 சதம் அறவிடுகின்றது. பகலில் மினிபஸ்கள் 7 ரூபாவை அறவிடுகின்றன. ஆனால் அதிகாலையில் ரயில் பயணிகளிடம் இவ்வாறு அதிகமாக 10 ரூபா அறவிடப்படுகிறது

### கண்டெடுக்கப்பட்ட அடையாளஅட்டை

687202180V என்ற அடையாள அட்டையும் பேர்சும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அடையாளம் காண்பித்துப்பெற்றுக்கொள்ளவும்.

### கள்ளச் சாராயம் அருந்தி 3 பேர் இறப்பு

(புதுடில்லி)

தென் ஆர்க்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு அருகில் சின்னப்பூபம் என்ற இடத்தில்கள்ளச் சாராயம் அருந்தி மூன்று பேர் நேற்று முன்தினம் இறந்துபோனார்கள சாராயம் அருந்திய மற்றொருவர் சிதம்பரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கிறார். சாராயத்தை விற்றவர் தலைமறைவாகிஇருப்பதாகபொலிசார் தெரிவித்தனர்.

சென்ற பெப்ரவரி மாதம் தென் ஆர்க்காட்டு மாவட்டத்தின் தடடான் சாவடிஎன்னும் இடத்தில் விஷச் சாராயம் அருந்தி 35 பேர் இறந்தது குறிப்பிடத் தக்கது.

இதே வேளை தென் ஆபிரிக்க நாடுகளில் கறுப்பின மக்களுக்காக தாம் குரல் எழுப்ப என்றுமே தயாராக இருப்போம் என்றும் தெரிவித்தார் ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கு ராஜரீகத் துறையில் அங்கீகாரம் அளிப்பது பற்றி தமது அரசு தீவிரமாக யோசித்து வருவதாகவும் சொன்னார்.

## போதைப் பொருள் ஒழிப்பு மாநாடு லண்டனில் ஆரம்பம்

போதைப் பொருள் தடுப்புப்பற்றி அனைத்துலகரீதியில் நடத்தப்படும் மகாநாடு லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

கொலம்பியா ஜனாதிபதி பாகே உட்பட நூறு நாடுகளில் இருந்தும் அமைச்சர்களும். முககிய அதிகாரிகளும் லண்டனுக்குச் சென்றிருககிறார்கள்.

இந்த யுகத்தின் மிகப்பெரிய விபத்து இது என்று ஜனாதிபதி பாகேபோதைப் பொருட்கள் பற்றி விபரித்திருக்கிறார்.

மகாநாட்டை தொடக்கி வைத்துப் பேசிய பிரித்தானிய பிரதமமந்திரிமார்ங்கிறட் தட்சர் போதைப் பொருட்களின் தேவையைக் குறைப்பதற்கு பிரித்தானிய நிபுணர்கள் குழு ஒன்று உருவாக்கப்படும் என்றும். போதைப் பொருட்களை எதிர்த்து ஏனைய நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பிரித்தானயா நிதியுதவி வழஙகும் என்று அறிவித்தார்.

### வகுப்பறையில்

## கதைக்கும் பிள்ளைகளைத் தடுக்க புதிய முறை

(மீசகிங்)

வாயாடிகளான பாடசாலைப் பிள்ளைகளை வகுப்பறைகளில் கதைக்காமல் தடுப்பதற்கு சீனாவில் ஆசிரியர் ஒருவர் புதிய முறை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்

அந்த ஆசிரியர் தமது தயாரிப்பான ஒரு அக்குபஞ்சர் ஊசியால் பிள்ளைகளின் உதடுகளைச் சேர்த்துத் தைத்து விடுகிறார். ஒன்பது வயது நிரம்பிய இரு பாடசாலைப் பிள்ளைகளின் உதடுகளைத் தைத்த ஆசிரியர், இனிமேல் யாரும் கதைத்தால் தண்டனை இந்த மாதிரித் தான் அமையும் என்று பிள்ளைகளை எச்சரித்துள்ளார்.

இச்சம்பவம் ஜுனானின் ஒரு பாடசாலையி நடந்துள்ளது.

### கல்முனையில் மக்கள் முன்னணிக் கிளை

(அம்பாறை மாவட்ட நிருபர்)

கல்முனை முகலாம் வட்டாரத்தின் விடுதலை புலிகள் மக்கள் முன்னணிக் கிளைகள் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் மக்கள்

## அயர்லாந்தில் குண்டுவெடிப்பு நான்குபிரிட்டிஸ் இராணுவம்பலி

(லண்டன்)

வட அயர்லாந்தின் கவுண்டிலோ பகுதியில் டவுண்பற்றுக்கு அருகில் உள்ள வீதியில் குண்டு ஒன்று வெடித்தபோது பிரித்தானிய இராணுவ வீரர் நால்வர் கொல்லப்பட்டார்கள் பலருக்கு காயம் ஏற்பட்டது.

இந்த தாக்குதலை தாமே நடத்தியதாக ஐ ஆர். ஏ. இயக்கம் அறிவித்திருக்கிறது. உள்ளூர் வேலைகளில் பணியாற்றும் ஐக்கிய பாதுகாப்புப் படைப்பிரிவு இராணுவ வீரர்கள் தெரு வீதிவழியாக கடந்து சென்ற போது தொலைதூர இயக்கி மூலம் குண்டு வெடிக்கப்பட்டிருக்கலாம் என பிரித்தானிய இராணுவத்தினர் சந்தேகிக்கின்றனர்.

இந்த தாக்குதல் மிகவும் மோசமானது கோழைத்தனமானது என்று வட அயர்லாந்து வட்டார அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

## நேபாளத்தில் பல கட்சி பங்குபற்றும் தேர்தல்

(காட்மண்டு)

நேபாளத்தில் அரச சாசன தேர்தல் கமிஷன் திருத்தியமைக்கப்பட்டதும் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று நேபாளிய பிரதம மந்திரி கூறியுள்ளார்.

திங்கள் காட்மண்டுவில் பிரதம மந்திரி லோகேந்திர பகதூர் சந்த் செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறினார். முன்னாள் பிரதம மந்திரியின் அத்துமீறிய நடவடிக்கைகளை பற்றி செய்தியாளர்கள்கேட்ட போது இவை பரிசீலனை செய்யப்படும் என்று கருத்துத் தெரிவித்தார்.

இதற்கு முன்பாக மன்னர் திப்பேந்திரா பல கட்சி ஆட்சி முறைக்கு இணக்கம் தெரிவித்தமை தெரிந்ததே. கடந்த 30 ஆண்டுகால நேபாளத்தில் இருந்த அரசியல் கட்சிகளின் மீதான தடை இப்போது தான் நீக்கப்பட்டிருக்கிறது. இது நேபாளிய அரசியல் வரலாற்றில் ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி என நேபாளிய காங்கிரசும், ஐக்கிய இடதுசாரி முன்னணியும் அறிவித்திருக்கிறது.

அதேவேளை மக்கள் குதூகலம் மிக்க ஊர்வலம் ஒன்றை திங்கள் அன்று காட்மண்டுவில் நடத்தினர்.

## இருபத்தியொன்பது குர்திஷ் தீவிரவாதிகள் பலி

(அங்காரா)

துருக்கியிற்கும் ஈராக்கிற்கும இடையில் அதன் எல்லைப் புற பிரதேசஙகளில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற சண்டையில் 29 குர்திஷ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். இத் தகவலை துருக்கி அறிவித்திருக்கிறது.

சண்டை நடைபெற்ற டைமாயால் என்ற கிராமத்தைச் சுற்றி துருக்கிய பாதுகாப்புப் படையினர் எஞ்சிய வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் பாதுகாப்புப் படையினரில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் கூறப்பட்டது.

இத் தீவிரவாதிகள் மாக்சிச குர்திஷ் மக்கள் கட்சியை சேர்ந்தவர்கள் என்றும் கடந்த ஆறு வருடங்களாக பிரிவினை கோரி குர்திஷ் மக்கள் போராடி வருகிறார்கள் என்றும், குர்திஷ் மக்களின் இவ் எழுச்சிக்குப் பின்னர் இவர்கள் நடத்திய மிகப் பெரும் மோதல் இதுவே என்றும் அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள்.

### லண்டன் செல்கிறார்

மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு. தி. இராசநாயகம் புலமைப் பரிசில் பெற்ற பிரதேச திட்டத் துறையில் மேற்கல்வி கற்பதற்காக திட்டமிடல் அமைச்சினால் நடத்தப்படும் பயிற்சியை கொழும்பில் முடித்துக் கொண்டு லண்டன் மாநகர் செல்கிறார்.

அவர் பூநரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி புனர் வாழ்வுக் கழகம் என்பவற்றின் தலைவரும் ஆவார்.

### சர்வதேச மகளிர் தின சங்கீதப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட சிக்கன கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தினால் சர்வதேச மகளிர் தின

### பிரிவுபசார வைபவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரி சிக்கன சேமிப்பு சங்கத்திலிருந்து புதிதாக உருவாகிய வடமராட்சி கிழக்கு

ஒளி தோன்றி வருகிறது. அது நிரந்தரமாக எமது மண்ணில் ஒளிர்ந்திட, நாம் இன்னும் தியாகங்களைச் செய்தாக வேண்டும். எமக்கு அமைதி தர வந்தவர்களால் நாம் பெற்ற அல்லல்களோ அநேகம். எங்களின் சுதந்திர உணர்வை மழுங்கடிக்க அந்நியர்களும், அடிவருடிகளும் எடுத்த முயற்சிகள் வீணாயின''

...பேசிய விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதித் தோழர் திரு. எஸ். நரேஸ் தெரிவித்தார்.

டாக்டர் வை யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அதிபர் திரு நா சங்கரப்பிள்ளை, தீவுப்பகுதி அரசியற் பொறுப்பாளர் திரு. வி. காஸ்ரோ ஆகியோரும் பேசினர்.

# நாம் சிந்திய இரத்த உணர்வை மேலோங்கச் செய்தது - காஸ்ரோ

(நெடுந்தீவு)

''எங்கள் விடுதலைக்காக நாம் சிந்திய இரத்தம், எமது வீர உணர்வுகளை மேலோங்கச் செய்தன. மக்களின் மரணங்கள், போராட்ட உணர்வுகளுக்கு உரமூட்ட வேண்டும், அந்நியர்களும் நமக்கு விடிவினை வேண்டித் தருவதாகக் கூறிக்கொண்டவர்களும் தோல்வியைத் தழுவ, மக்களின் அசையாத ஆதரவும், கொள்கையில் நாம் கொண்ட திடமான உறுதியும் எமக்கு உதவின. மக்கள் போராட்டமொன்று மலர்வதையே எமது விடுதலைப் போரில் வெற்றி தரும் செயற்பாடாகக் கருதுகிறோம்,''

இவ்வாறு தீவுப்பகுதி அரசியற் பொறுப்பாளர் திரு. வி காஸ்ரோ தெரிவித்தார். நெடுந்தீவைச் சேர்ந்த வீரவேங்கை குட்டி கண்ணனின் அஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டு, திரு. சு. நடராசலிங்கம், அதிபர் திரு. நா. சங்கரப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்.

# அன்னை பூபதி நினைவாக முல்லைத்தீவில் விளையாட்டு

நீண்ட கால இடைவெளிக்கு பின் மிக நீண்ட தூர சைக்கிள் ஓட்டப்போட்டி முல்லைத்தீவில் இடம்பெற்றது. கொக்கிளாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் முதலாவதாக இதில் வெற்றி பெற்றார்.

அன்னை பூபதியின் நினைவாக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதலாம் பிரிவினர்க்கான நீண்ட தூர சைக்கிள் ஓட்டப் போட்டியும் படகோட்டப் போட்டியும் இடம் பெற்றன.

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முல்லைத்தீவு, சிலாவத்தை, அளம்பில், செம்மலை, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், வட்டுவாகல், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகள் முதலாம் பிரிவாகவும் முள்ளியவளை, வற்றாப்பளை, கோப்பார்பிலவு, குமுழமுனை, கழிக்காடு, தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி ஆகிய பகுதிகள் இரண்டாம் பிரிவாகவும் விளையாட்டுக்கள் இடம் பெறுகின்றன.

2, 3 ஆம் பிரிவினர்க்கான நீண்ட தூர சைக்கிள் ஓட்டப் போட்டியும் வண்டில் சவாரிப் போட்டியும் எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறும்.

தொடர்ந்து உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிளிக்கோடு, கிரிகெற், எல்லை என்பன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (58)

# முல்லைத்தீவில் பூபதிக்கு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி

(முல்லைத்தீவு)

உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு நினைவுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு அன்னையர் முன்னணியினர் சுழற்சி முறை உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட வீதிகள் தாரணங்களால் அலங்கரிக்கப் பட்டு நிழல் பந்தல்களில் அன்னையின் உருவப் படத்துக்கு குத்துவிளக்கேற்றி மக்கள் மலர் அஞ்சலி செய்கின்றனர்.

முல்லைத்தீவு, முள்ளியவளை, அளம்பில், செம்மலை, குமுழமுனை, ஆகிய இடங்களில் நடைபெறும் இக்கூட்டங்களில் கைலாஸ், திவாகர், மனோ, முல்லைச் செல்வன் பிரசாத், ரகு ஆகியோரும் விடுதலைப்புலிகள் சார்பாகக்கலந்து கொள்கின்றனர்.

14ஆம், 15,ஆம், திகதிகளில் ஊர்வலங்களும் அஞ்சலி கூட்டங்களும் நடைபெறும் 19 ஆம் திகதி அன்று மாபெரும் பொதுக் கூட்டமும்கலை நிகழ்சிகளும் இடம் பெறும்.

## சிற்றூர் குழுக்கள்

(வந்தாறு மூலை)

கடந்த 4 ஆம் திகதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஏறாவூர் பற்று அமைப்பாளர் திரு. அலக்ஸ் சாந்தர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் முக்கியஸ்தர் குஞ்சு மாஸ்ரர் ஆகியோர் தலைமையில் வந்தாறு மூலையில் இரண்டு சிற்றூர் குழுக்கள் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்டன ஒவ்வொரு சிற்றூர் குழுவிலும் ஏழு பேர் கொண்ட நிருவாக உறுப்பினர்கள் உள்ளனர். (29)

## இன்று கூட்டம்

(முல்லைத்தீவு)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உள்ளூர் கிராமங்கள் தோறும் கட்டமைக்கப்பட்ட ஊரவை நிர்வாகிகளின் முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவினர்க்கான ஒன்றிணைந்த கூட்டம் இன்று புதன்கிழமை முல்லைத்தீவில் இடம் பெறவுள்ளது.

...டம் அண்மையில் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. இ நடராசா, உப தலைவர்: திரு. பொ. சாமித்தப்பி, செயலாளர்: திரு த சத்தியமூர்த்தி. உப செயலாளர்; திரு. கு. குலரெத்தினம். பொருளாளர்: திரு க. பாலசிங்கம். (48)

# இரணைதீவு கடல் பகுதியில் டைனமற் மூலம் மீன்பிடிப்பு

(குருநகர்)

இரணைதீவுக் கடலில் டைனமற் வெடியினால் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஆறு மீனவர்கள் விடுதலைப்புலிகளால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்

குருநகரைச் சேர்ந்த இந்த மீனவர்கள் விசாரணையின் பின்னர் எச்சரிக்கப் பட்டு விடுவிக்கப்பட்டனர்.

சில தினங்களுக்கு முன்னர் பள்ளிக்கூடாக் கடலில் டைனமற் மூலம் மீன்பிடித்த ஒருவர் டைனமற் வெடியில் சிக்கியதால் ஒரு கையையும் காலையும் இழந்தார்.

இதனையடுத்து டைனமற் மூலம மீன் பிடிக்கக் கூடாது என்று விடுதலைப்புலிகள் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

## சதுக்க திறப்புவிழா

(அம்பாறை)

பாண்டிருப்பு மகாவித்தியாலய ஒன்று கூடல் சதுக்கத் திறப்பு விழா வைபவம் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

கல்முனைப் பிரதேச சமாதான ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளர் திரு.பாண்டியூரன் விழாவில் குத்துவிளக்கேற்றி வைத்தார்இந்துஇளைஞர் மன்ற தலைவர் திரு கா. வே சண்முகநாதன்அரங்கைத் திறந்து வைத்தார்.

மகாவித்தியாலய அதிபர் திரு. சண்முகம் -சிவலிங்கம் (சசி) அவர்கள் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

## மெதடிஸ்த மிஷன் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டி முதல் முறையாக இப்பாடசாலை மைதானத்தில் நடை பெற்றது.

ஆரம்ப பாடசாலையான இப் பாடசாலையில் சிறுவர் சிறுமியர் பலர் கலந்து கொண்ட இப் போட்டியை பெற்றோர் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு இரசித்தனர்.

இப் போட்டியில் பாரதி இல்லம் முதலிடத்தைப் பெற்றது. கொத்தணி அதிபர் திருமதி. நாகநாதர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (42)

...னால் சர்வதேச மகளிர் தின விழாவையொட்டிச் சங்கீதப் போட்டியொன்று நடாத்தப் பட்டது.

யாழ் உதவி அரச அதிபர் பிரிவு பிரதேசசபை சிக்கன கூட்டுறவுக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போட்டியில் பங்கு பற்றின. சங்கீதப் போட்டியில் செல்வி க. ஹேமலதா (கொழும்புத் துறை கிழக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம்) முதலாம் இடத்தையும் செல்வி.சி.ஆன். றூமினா (பாஷையூர் சி.க.கூ சங்கம்) இரண்டாம் இடத்தையும் செல்வி சி.மொறின் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

வினோத உடைப் போட்டியில் யாழ். குருநகரைச் சேர்ந்த செல்வி. சி. மொறின் முதலாம் இடத்தை தட்டிக் கொண்டார். (24)

## மிருசுவில் அஞ்சலிக் கூட்டம்

(சாவகச்சேரி)

'அன்னை பூபதி கணபதிப்பிள்ளை தமிழீழ மண்ணையும், தமிழ் மக்களையும் தன் உயிரைவிட மேலாக நேசித்த ஒரு தியாகத்தாய், அவர் தியாகத் தீயில் வெந்து, மாந்தருள் மாணிக்கமாக மாறி இப்பொழுது ஈராண்டு பூர்த்தியடைகிற இந்த நேரத்தில்' தமிழர்களாகிய நாம் கண்ணீர் முத்துக்களால் எமது தாயின் அஞ்சலியைச் செலுத்திக் கொள்ளுகிறோம்.

இவ்வாறு மிருசுவில், எழுதுமட்டுவாளில் நடைபெற்ற அன்னைபூபதி கணபதிப்பிள்ளையின் அஞ்சலிக் கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்திய திரு குலேந்திரன் கூறினார்.

மிருசுவில் படித்த இளம் பெண்கள் குடியேற்ற திட்டத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மிருசுவில், எழுதுமட்டுவாள் பகுதிப் பொறுப்பாளர் திரு. இராகுலன் தலைமை தாங்கினார்.

...வாகிய வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாத்திரம் பொற்ற அங்கத்தவர்களுக்கும். சங்கத்திலிருந்து விலகிப்போன அங்கத்தவர்களுக்கும் பிரிவுபசார விழாவொன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை, பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரி சிக்கன சேமிப்பு சங்கச் செயலாளர் திரு. ரி. இராஜலிங்கம் மேற்கொண்டுள்ளார். (25)

## வீதி திருத்த வேலைகள் ஆரம்பம்

(வந்தாறு மூலை)

மட்டக்களப்பு திருமலை பிரதான வீதியில் குடியிருப்பிலும் சத்துருக் கொண்டானிலும் வீதித் திருத்தம் நடைபெற்று வருகின்றது. வீதி உயர்த்தப்பட்டும், அகலமாகவும திருத்தங்கள் நடைபெறுற் வருகின்றது.

கடந்த பல வருடங்களாக இவ்வீதி புனரமைப்பு செய்யப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (29)

## கும்பாபிஷேக விழா

(தீவுப்பகுதி)

வேலணை மேற்கு பெரிய புலம் மஹா கணபதிப்பிள்ளையார் (முடியாப்பிள்ளையார்)கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா திருக்குடத் திருமஞ்சன மஹா கும்பாபிஷேக வைபவம் எதிர் வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், துர்க்கா துரந்திரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றுவார்கள். (15)

# மக்கள் வங்கி





# சித்திரை வருடப்பிறப்பு-கைவிசேட நிகழ்ச்சி





வடபகுதியில் இயங்கும் 16 மக்கள் வங்கிக் கிளைகளிலும் இம்மாதம்
14ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிமுதல் நண்பகல்
12-00 மணிவரை மேற்படி நிகழ்ச்சி இடம்பெறும். அன்றைய தினம்
வங்கியில் வைப்புச்செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கும்,
புதிய வாடிக்கையாளர்களுக்கும் வைபவ ரீதியாகக்
கிளை முகாமையாளரினால் கைவிசேடம் வழங்கப்படும்.

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இந்நிகழ்ச்சியில்
பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## மக்கள் வங்கி வழங்கும் புதுவருட சலுகை

# ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி வரை

மக்கள் வங்கி வழங்கும் 2 வருட கைமாற்றக்கூடிய

## சேமிப்புச் சான்றிதழ்களை இம்மாதம் 14 ஆம் திகதி வரை

3வீத வரிவிதியைச் செலுத்தாமல் வாடிக்கையாளர்கள்

**மக்கள் வங்கிக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**



## வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

கைமாற்றக் கூடிய சேமிப்புச் சான்றிதழ்களின் நடைமுறை வட்டிவீதம்
16.3 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ரூ. 8,600/- 12 மாதங்களுக்கு முதலீட்டு முதிர்ச்சியின்போது
ரூ. 10,000/- ஐ பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
யாழ்ப்பாணம்

பிராந்திய முகாமையாளர்

(B/737)

## நல்லூரில் உண்ணாவிரதம்

(நல்லூர்)

நேற்று காலை 8-30 மணியளவில், அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டை நினைவு கூரும் அடையாள உண்ணாவிரதம்1 நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில் நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்கள். கவிதா நிகழ்வுகளும், நினைவு அஞ்சலி கருத்துரைகளும் நடைபெற்றன. அனைத்து தமிழ் பேசும் மக்களும் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்து முகமாக இதிற் கலந்து சிறப்பித்தனர்.

## மெதடிஸ்த கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்

(பருத்தித்துறை)

பருத்திததுறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கம் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுச் செயற்படத் தொடங்கியுள்ளது.

இப்பழைய மாணவிகள் சங்க புனரமைப்புக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்.

தலைவி திருமதி ரீ. அரியரட்ணம், இணைச்செயலாளர்கள் திருமதி வி. சிவசோதி திருமதி ஏ தேவராஜா இணைப் பொருளாளர்கள் திருமதி ஜே. தேவராஜா, திருமதி ஏ. சந்திரகாந்தன்,

அத்துடன் 9 பேர்கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யபபட்டது, (25)

## தேசிய போக்குவரத்துத் தினவிழா

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை ஷப்றா நிதி நிறுவனத்தின் ஆதரவுடன் நடாத்தும் தேசிய போக்குவரத்துத் தினவிழா எதிர் வரும் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வடபிராந்திய போ. சபையின் யாழ். மத்திய பேரூந்து நிலையத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவின்போது சிறந்த தொழிலாளர்களுக்கும் அதிவிசேட சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். மற்றும் சொற்பொழிவுகள், ஓரங்க

## ஐ. தே. க. செயற் குழுவிலிருந்து காமினி வெளியேற்றம்

(கொழும்பு)

கடந்த மந்திரி சபை மாற்றத்தின் போது காமினி திஸநாயக்காவின் பதவி பறிக்கப்பட்டது. இது தொடர்பாக காமினி கருத்துத்தெரிவிக்கையில், ''எனக்கு அரசியலில் மகிழ்ச்சியான ஒரு கருமம். எனது பொது, அரசியல் வாழ்க்கையால் உலகில் தலைசிறந்த சிலரைத் தெரிந்து கொண்டுள்ளேன். ஆகவே எனக்குக் கவலையில்லை! கவலை என்பதே கிடையாது'' இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி செயற் குழுவிலிருந்து முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்காவுடன், இரு முன்னாள் அமைச்சர்களான வின்சன் பெரேராவும், டாக்டர் பி. எம். பி. சிறிலும் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோசடி செய்த தபால் ஊழியர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து அனுப்பப்பட்ட காசோலையை வங்கியில் மாற்ற முயன்ற தபால் ஊழியர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து சில தந்திகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் எமது தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!




(B.490)

## கொழும்புத்துறை மக்களுக்கு ஊக்குவிப்புப் பணம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிராம வறிய மக்களின் சுயதொழில் ஊக்குவிப்புக்கு உதவும் முகமாக யாழ். உதவி அரச அதிபரினால் கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்பில் ஈடுபடுத்தும் முகமாக இப்பணம் பயன்படுத்தப்படும். கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுச் சபை உறுப்பினர்கள் ஐவருக்குச் சுழற்சி முறையில் ஆடுகள் வழங்கப்பட உள்ளன.

## ஈழத்து இலக்கிய வரலாற்றில் டானியல்நூல்கள்நிலையானது

(விசேட நிருபர்)

''மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் நூல்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் இப்பொழுது கலைமாணிப் பட்டத்திற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன''.

மக்கள் கலை, இலக்கியப் பெருமன்றம் கடந்த ஞாயிறு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்திய டானியல் நினைவுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவேற்புரையைத் திரு. பொன். பொன்ராசா நிகழ்த்தினார்.

திரு.சிவலிங்கராஜா மேலும் பேசுகையில், ''டானியலது படைப்புகள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைப் பெறும் வல்லமை வாய்ந்தன. அவரது பாத்திர வார்ப்புகள் யதார்த்தமானவை. 'அடிமைகள்' நாவலில் வரும் 'சரக்கன்' என்னும் பாத்திரம் எனது தகப்பனாரின் ஊரான கொடிகாமத்தில் வாழ்ந்ததை, சிறுவனாக நான் இருந்தபொழுதே அறிந்திருந்தேன். அந்தச் 'சரக்கன்' எனது தகப்பனாரின் நண்பனாகவும் இருந்தார்'' என்றார்.

திரு. சச்சி மாஸ்ரர் பேசுகையில், ''சமுதாயத்தில் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. அடித்தவனுக்கு அடிக்க வேண்டுமென்ற கோட்பாட்டில் இம்மியும் பிசகாமல் செயற்பட்டவீரன் டானியல்'' என்றார்.

ஜனாப். இக்பால், கலாநிதி நா. சுப்பிரமணியன், திரு. கே. தங்கவடிவேல், திரு. த. கலாமணி, திரு. டானியல் அன்ரனி, செல்வி தாரகா டானியல் ஆகியோரும் பேசினார்கள்.

கவிஞர்கள் எஸ். ஜி. கணேசவேல், நல்லை அமிழ்தன் ஆகியோர் கவிதாஞ்சலி செலுத்தினார். திரு. தேவி பரமலிங்கம் நன்றி கூறினார். (22)

### ஹோமியோபதி வைத்திய தந்தை

## டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 235ஆவது பிறந்தநாள் விழா

(விசேட நிருபர்)

'வைத்தியராகிய நாம் தூய உள்ளத்தோடும், சேவைமனப் பான்மையுடனும் எமது மனித சமுதாயத்தை ஆரோக்கியமான சமுதாயமாக உருவாக்க வேண்டும். எமது அயலில் உள்ள மக்களுக்கு சுற்றாடல் கல்வியையும், ஆரம்ப வைத்திய அறிவுரைகளையும் வழங்கி திடகாத்திரமான சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வைத்தியர்களாகிய நாம் முன் வரவேண்டும்.'

ஹோமியோபதி வைத்திய முறையின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமன் அவர்களது 235ஆவது பிறந்தநாள் விழா வைபவத்தில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட டாக்டர் டி ஏ மத்தியூஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த ஞாயிறு யாழ் நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் டி ஏ. மத்தியூஸ் தொடர்ந்து பேசுகையில, ''அன்று மாமேதை டாக்டர் சாமுவேல் ஹனிமன் அவர்களது 235ஆவது பிறந்ததின விழாவில் வட இலங்கை ஹோமியோபதி சங்கமும், வட இலங்கை அக்குபஞ்சர் சங்கமும் இணைந்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தமைக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன், என்றார்.

யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட், டாக்டர் திருமதி சு. கதிர்காமர், டாக்டர் ப. ஹோமகேஸ்வரன், டாக்டர் எஸ். மோசஸ், டாக்டர் எஸ் ரி. புவிராசன், திரு. ம. வேலுப்பிள்ளை ஆகியோரும் கலந்து கருத்துரை வழங்கினர்.

டாக்டர் எஸ் சிவநேசனும் கௌரவிக்கப்பட்டார். (21

## அஞ்சலிக் கூட்டம்

(கரவெட்டி)

புவனேஸ்வரி அம்பாள் ஆலய கலாசார மண்டபத்தில் அன்னை பூபதிக்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

திரு எஸ். அரசலிங்கம் தலைமையில் நடை பெற்ற இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மகளிர் முன்னணி, மாணவர் இயக்கப் பிரதி நிதிகளும் மற்றும் பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

அஞ்சலி! அஞ்சலி!! அஞ்சலி!!!
அன்னை பூபதிக்கு அஞ்சலி
அன்னை பூபதியின் நாமத்தை
என்றென்றும் நினைவு கூருவோம்
தீவக மக்கள் சார்பாக



ராஜா ஸ்ரோர்ஸ்
பழைய பஸ் கொம்பனி அருகில்
வேலணை.
லிங்கம்ஸ் ஸ்ரோர்ஸ்
பழைய பஸ் கொம்பனி அருகில்
வேலணை.

(R/155)

COMMERCIAL BANK

அன்னை பூபதிக்கு எமது
கண்ணீர் அஞ்சலி



அன்னை பூபதிக்கு ஆயிரமாம் அஞ்சலிகள்



நாடகம், பொப்இசை ஆகியனவும் நிகழும். நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர் சகல இடங்களுக்கும் பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## ஊழியரைத் தாக்கிய இளைஞர்கள் பிணையில்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை நீதிமன்ற ஊழியர்களை தாக்கிய குற்றச் சாட்டின் மீது மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 2ம் திகதிக்கு இது தொடர்பான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.


கடந்த காலங்களில் பல இன்னல்களுக்கு மத்தியிலும் மகத்தான சேவையாற்றி மக்கள் மனதில் நிரந்தர இடத்தை வகிக்கும் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை எமது பாரம்பரியத்தைப் பேணும் வகையில் எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று 14-04-1990 காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை கூடும் சுபவேளையில் வாடிக்கையாளர்களுக்குப் பல புத்தாண்டுச் சலுகைகளையும், பரிசுகளையும் வழங்கவிருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

உங்கள் ஆதரவுடன் மேன்மேலும் எமது பணி தொடர அன்புடன் வருக வருகவென அழைக்கிறது உங்கள் இலங்கை வர்த்தக வங்கி.

முகாமையாளர்

(B.706)





Sunrise Traders

General Merchants & Commission Agents

6, KACHCHAI ROAD, CHAVAKACHCHERI.

(B/517)





PILLAIYAR & CO,

பிள்ளையார் அன் கோ.

General Merchants & Commission Agents

104, கண்டி வீதி, சாவகச்சேரி.

104, Kandy Road, Chavakachcheri.

(B 522)



அனைவருக்கும் எமது தமிழ்-சிங்கள புதுவருட வாழ்த்துக்கள்!

பெண்மைக்கு மெருகேற்றும் · இளமைக்கு எழிலூட்டும் · நங்கையர் நாடும் நவமான நகைகளை

22 கரட் தங்கத்தில் நாகரிகமான டிசைன்களில் செய்வதில் நகை உலகில் நம்பிக்கை நாணயத்துடன் நற்புகழ் பெற்றவர்கள்

நதியா ஜுவல்லறி

இல. 2, கஸ்தூரியார் வீதி,

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)

யாழ்ப்பாணம்.

B/559



அனைவருக்கும் எமது உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

உங்களது நயம், நம்பிக்கை, நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்

அசோகா ஜுவல்லர்ஸ்

தங்கப் பவுண் நகை வியாபாரம்

275, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

B.568

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

அரும்பாய்

26

09

1963



வித்தாய்

11

01

1990



# மேஜர் சோதியா

## (மைக்கல் மரி அமலோற்பவ வசந்தி - கரவெட்டி)

தாண்டு போயிருந்த
தமிழன் உரிமைகளை
தோண்டி எடுக்க
துப்பாக்கி எடுத்தவளே......!

அதிகாலை ஒன்றிற்காய்
அஸ்தமித்த வேளையில்
உலகத்தின் உள்ளத்தில்
உதயமாகி விட்டாய்
சோதியா......!

சரித்திரத்தின் பிரசவிப்பில்
சாய்ந்து போன கோபுரம்
சரிந்து கிடந்த சந்ததியை
நிமிரச் செய்த
நெம்புகோல் ;

இவளின்
உயிரற்ற உடலை
உள்ளே வைத்திருப்பதால்
காலந்தோறும்
கல்லறை ஒன்று
கௌரவம் பெறுகிறது.

சரித்திரத்தில் உன்சாவு
சகிக்க முடியாது தான்
ஆனாலும்
சமாளித்துக் கொண்டோம்

விடியலைத் தடுத்த
வேலிகளைப் பிரிப்போம்
உரிமைகளைப் பறித்து
உணர்வுகளைச் சிதைக்க வரும்
ஆதிக்கக் கரங்களை
அக்கினியில் கொளுத்துவோம்.

இறப்புகள் தொடர்ந்து
இதயம் வருந்தினாலும்
இலக்கை நோக்கியே
கால்கள் விரையும்
கரங்கள் உயரும்

இரத்தம் வடிந்தாலும்
எங்கள் முகங்கள்
வேதனைத் தீயில் வேகாமல்
வெற்றிக் களிப்பால்
சிவப்பாகட்டும்!

**விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி**

சிந்தனைக்கு

சேர்ந்து வாழுவீரோ? உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ!

- பாரதியார்

ஈழநாதம்

31. வைமன் வீதி, யாழ்ப்பாணம். 11 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2202

## "தனக்கு மூக்குப் போனாலும்..."

"தனக்கு மூக்குப் போனாலும்
எதிரிக்குச் சகுனப் பிழையானால் போதும்"
என்பது ஒரு முதுமொழி.

மக்களையும் மாகாணசபையையும் கைவிட்டு ''தலை தப்பினது தம்பிரான் புண்ணியம்'' என்று ஓடிப் போனவர்கள் இப்பொழுது மீண்டும் வரப்போகிறார்களாம்; ஜுன் மாதம் ஏழாந் தேதிக்கு முன் மாகாண சபையின் கூட்டத்தை நடத்தப் போகிறார்களாம் என்ற செய்தி முன்கூறிய முதுமொழியையே நினைவுபடுத்துகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஓர் அமைச்சர் அபுயூசுப் கடந்த மாதம் இருபத்திநான்காம் தேதி இந்தியப் படையின் கடைசி அணியும் திருக்கோணமலையிலிருந்து போவதற்கு முன்பே மாகாண அமைச்சர்கள் எவரையுமே காணோம். அவர்கள் பற்றிய தகவலே இல்லை.

மாகாணசபையின் செயலாளர்கள்கூட தலைமறைவாகி விட்டனர். மாகாணசபை ஊழியர்களின் நிலையும் திரிசங்கு நிலையிலுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் எங்கே என்பது இன்னமும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்திய விமானப்படை விமானத்தில் வரதராஜப் பெருமாள் புறப்பட்டதைக் கண்டதாகத் திருக்கோணமலையில் சிலர் தெரிவித்தார்கள். கர்நாடக மாநிலத்தில் நந்திமலையில் வசதியான பங்களாவில் தங்கி இருப்பதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

ஆனால் இந்திய அரசோ 'பெருமாள் இந்தியாவில் இல்லை' என்று உத்தியோக பூர்வமாக மறுத்துவிட்டது.

முதலமைச்சரைப் பற்றிய தகவல் தெரியாமலும் அமைச்சர்களும் தலைமறைவாகி ஊழியர்கள் செய்வதறியாது திகைத்து நிற்க மாகாண சபையின் நிர்வாகப் பொறுப்பை மாகாண ஆளுநரிடம் ஒப்படைத்தார் ஜனாதிபதி பிரேமதாசா.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குப் புதிதாக தலைமைச் செயலாளரையும் மற்றும் அதிகாரிகளையும் நியமித்து மாகாணசபையை ஆளுநர் நிர்வகித்து வருகிறார்.

இந்நிலையில் செயலற்றுப்போன வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டுமென்றும் மாகாண சபைக்கு நடைபெறும் புதிய தேர்தலில் தாங்கள் போட்டியிடத் தீர்மானித்திருப்பதாகவும் விடுதலைப்புலிகள்

# இலங்கை உள்நாட்டு வெளிநாட்டு

# கொள்கைத் திருப்புமுனை திருமலை

தேசிய தினசரிப் பத்திரிகை ஒன்றில் கடைசிப் பக்கத்தில் வெளியான மிகச் சிறிய அளவிலான கொழும்புச் செய்தி ஒன்று பலர் கண்களிற் படாமல்போய்விட்டது. இச்செய்தி அறிக்கையின்படி இரண்டு பாகிஸ்தான் கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளப்போவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

செய்தியின் முக்கியத்துவத்துக்கானகாரணங்கள் இரண்டு இந்திய அதிகாரிகள் கப்பல்களின் இலங்கை வருகை பற்றிக் கரிசனை கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், உத்தியோகபூர்வமில்லாத இந்திரா காங்கிரஸ்பேச்சாளர் எம். ஜே அக்பார், அவர் ஒரு பத்திரிகையாளர் என்ற வகையில் கப்பல்களின் இலங்கை வருகையில் ஏதோ தொக்கி நிற்பதாக எண்ணினார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடாமல் இழுபறி நிலையில் இருந்த வேளையிலும் திருக்கோணமலையை விட்டு இந்திய சிப்பாய்கள் வெளியேறும் சமயத்திலும் இச் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தம் வைத்துக் கொள்வதற்கு திருக்கோணமலையும் ஒரு காரணமென்றால் அது மிகையாகாது. இதற்கான வகையில் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்குமிடையில் சம்பிரதாயபூர்வமான உறவு முறைகளைப் பேணிக் கொள்வதற்காகக் கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்தியா இலங்கையிடமிருந்து கேட்டுக் கொண்ட நான்கு முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கைகளில் இரண்டு திருக்கோணமலையுடன் தொடர்புடையன.

**இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகமும் ஒரு காரணம். இந்தியா ஒப்பந்தத்தில் இலங்கையிடமிருந்து பெறவிரும்பிய நான்கு முக்கியமான நன்மைகளில் திருகோணமலை இயற்கைத் துறைமுகமும், எண்ணெய் வளங்களும் முக்கியமானவை.**

### திருக்கோணமலைத் துறைமுகம்

திருக்கோணமலைத் துறைமுகம் அல்லது இலங்கையில் அமைந்துள்ள வேறெந்த துறைமுகத்தையேனும் இந்தியாவின் நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் முறையில் மற்றநாடுகள் எவ்விதக் காரணத்தைக் கொண்டும் பாவிக்கக் கூடாது என்றும், திருக்கோணமலைஎண்ணெய் குதங்களைப் புனரமைப்பதையும் பரிபாலிப்பதையும் இலங்கையும் இந்தியாவும் கூட்டாகச் செய்து கொள்ள வேண்டுமென்று இந்தியா கடிதங்கள் மூலம் இலங்கையைக் கேட்டுக் கொண்டுள்ளது.

திருக்கோணமலையின் வரலாறு அதன் அமைவிடத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டது. சுருங்கக் கூறுவதாயின் இலங்கையின் இனவாத அரசியல் சிக்கல்களோடு பின்னிப் பிணைந்துள்ள திருக்கோணமலை ஓர் பகடக்காயாகவும் விளங்குகின்றது.

தென்கிழக்கு ஆசியாவின் மிகச் சிறந்த இயற்கைத்துறைமுகம் திருக்கோணமலை. திருக்கோணமலையில் நிலை கொண்ட போர்த்துக்கேயர் அங்கிருந்துதான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். 1658இல் ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தனர் கடைசியாக இலங்கையை ஆக்கிரமித்த மேற்கத்தேய நாடான இங்கிலாந்து 1796இல் கரையோர மாகாணங்களை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றியது.

வரலாற்றில் திருக்கோணமலை எல்லோரினதும் கவர்ச்சிக்குரிய மையமாக காணப்படுவதுடன் தொடர்ச்சியான தாக்குதல்களின் இலக்காகவும் இருந்தது. இதனால் திருக்கோணமலை மக்கள் களைப்படைந்தனர். திருக்கோணமலையில் பண்பாட்டு நீரோட்டங்கள் சங்கமாகின. இந்நகரில் இயற்கையான தன்மைகளினால், வடக்கு கிழக்கு மாகாணசபை உருவாகியதும் அதன் தலைநகரமாக திருக்கோணமலை அமைந்தது.

### பல்லினங்கள் வாழும் நகரம்

வடக்கு கிழக்கு மாகாண அரசின் இருப்பிடம் என்ற முறையில் திருக்கோணமலை காத்திரமான பொறுப்புகளை சுமந்திருந்தது. கடந்த காலங்களில் இங்கு மீளவும் குடியமர்ந்த பல் இன மக்களின் பிரச்சினைகளையும் மாகாண அரசு கவனித்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது இங்கு தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர் ஆகிய இனங்கள் ஒவ்வொரு இனமும் சமாந்திரமாக 33% வாழ்கி

### மாகாணசபையும் திருமலையும்

திருகோணமலையில் ஈ. பி. ஆர். எல். எவ். பி. னால் வழிநடத்தப்பட்ட மாகாண சபை அமைப்பு கலைக்கப்படலாம் என்ற கதை பலமாக அடிபடும் இக்காலகட்டத்தில் திருகோணமலை அரசியல் எவ்வாறு போகும் என்பது பலரின் கேள்விகளாகும். புதிதாக உருவாகி விடுதலைப் புலிகள் யு. என். பி. உறவுகள் ஜனதாதள், பிஜேபி முறையிலான ஒரு ஒருமைப்பாடு போன்றதாகும் இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ்ஸின் போக்கு கேள்விக் குறியாகிறது.

திருகோணமலையின் சக்தியும் கவர்ச்சியும் அரசியல் ஒரு பக்கத் தோற்றமாகும். இந்தியாவின் நோக்கங்கள வேறு மாதிரியானவை. இந்தியா திருகோணமலையை ஒரு துறைமுக நகரமாகவே காண விரும்புகிறது. திருகோணமலை அமெரிக்க கடற்படையின் பொழுதுபோக்கிற்கும், ஓய்வுக்கான இடமாகவும் இருப்பதை இந்தியா விரும்பவில்லை. 1980இல் இந்தியாவினால் வழங்கப்பட்ட இதற்கான ஆலோசனையை ஜே ஆர் ஜெயவர்த்தனா ஒத்திப் போட்டார்.

இந்தியாவின் அடுத்தகவலை இராணுவ, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் பற்றியதாகும். 1980களின் ஆரம்பத்தில் அமெரிக்கா, திருகோணமலையில் பாவிக்கப்படாதிருந்த எண்ணெய்க் கொள்கலன்களை பலகோடி ரூபாய் செலவில் குத்தகைக்கு அமர்த்த விரும்பியது. ஆங்கிலேயர் திருகோணமலையை விட்டு வெளியேறி கானில் (விமானப்படைத்தளம் மாலைதீவு) தளத்தை அமைத்தார்கள். அவர்கள் விட்டுச் சென்ற பாரிய கொள்கலன்களையும், சீனக்குடாவில் 700 ஏக்கர் காணியையும், ஒரு எண்ணெய் சேகரிப்பு நிலையத்தை அமைப்பதற்காகத் தரும்படி அமெரிக்க கோஸ்டல் கம்பனி இலங்கை அரசைக் கேட்டது.

கோஸ்டல் கம்பனி என்று

## பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மூடப்படும்!

வடக்கு கிழக்கு மாகாணத்தில் மூன்றே மூன்று முக்கிய கூட்டுத்தாபனங்கள் இயங்கி வருகின்றன. காங்கேசன் துறை சீமெந்து கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனம் என்பவையே இவையாகும் இம் மூன்று கூட்டுத்தாபனங்களும் கடந்த தொடர்ச்சியான கொள்ளைச் சம்பவங்களே.

1987 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தின் முக்கிய தொழில் எரிசோடா, குளோரின் இறக்குமதியும் விற்பனையும் ஆக இருந்தது. இக்கூட்டுத் தாபனம் 9362 93 மெற்றிக்தொன் எரிசோடாவையும் (திரவம், திண்மம்) 622.81 மெற்றிக் தொன் குளோரினையும் இறக்

## ஊர்சுற்றி எழுதுவது

முந்தநாள் இரவு அலுவலகத்திலிருந்து நண்பரும் நானும் புறப்படும்போது இரவு பதினொன்றரை மணி இருக்கும்.

ஆனைப்பந்திச் சந்தியைத் தாண்டி பலாலி வீதிச்சந்திப் பக்கம் போய்க் கொண்டிருந்தோம். மோட்டார் சைக்கிள்கள் நாலைந்து வீதிகளில் போய்க் கொண்டிருந்தன. சைக்கிள்களும போய்க்கொண்டிருந்தன.

ரவுண் பக்கம் ஒரு சுற்றுச் சுற்றி வரலாமென்று இருவரும் திட்டம் போட்டோம். மணிக்கூட்டு வீதிச் சந்தியையும் தாண்டிச் சென்று கஸ்தூரியார் வீதியால் திரும்பிச்சென்றோம்.

அந்த நள்ளிரவில் ஓர் இளம்பெண் "சாளி" எனப்படும் சிறிய மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்று கொண்டிருந்தாள். பின் ஆசனத்தில் ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான்!

மனதுககு ரம்மியமான காட்சி!

கஸ்தூரியார் வீதியில் கன்னாதிட்டிச் சந்தியை அடைந்தபோது பக்கவாத்திய சகிதம் பாட்டுக் கச்சேரி காதில்வந்துஒலித்தது.

வண்ணை சிவன் கோயில் உற்சவத்தில் பூங்காவனத் திருவிழா, ஆலயத்துக்கு முன்பாகவுள்ள மண்டபம் பச்சை ஓலைகளால்அடைக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. மேடையில் சிறுமியர் சிலர் கச்சேரி செய்து கொண்டிருந்தனர்.

பல வருடங்களுக்குப் பின் இக்காட்சியைக் கண்டபோது பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. முன்னர் இதே இடத்தில் கண்ணன் கோஷ்டி இசை நிகழ்ச்சி நடைபெறும். ஏ. ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் கணீர் என்ற குரல் ஒலிக்கும்.

மீண்டும் இப்படியொரு காட்சியைக் காண முடியுமா என்று சில மாதங்களுக்கு முன்னர் ஏங்கித் தவித்த உள்ளங்கள் முந்தநாள் இரவு அங்கு நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டு குளிர்ந்திருக்கும். ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாக அந்த நள்ளிரவிலும் கூட்டப் திரண்டிருந்தது

இன்னொரு விஷயம்; சிவன் கோயிலில் பக்தி

சபைக்கு நடைபெறும் புதிய தேர்தலில் தாங்கள் போட்டியிடத் தீர்மானித்திருப்பதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

மாகாண சபையைக் கலைப்பதற்குச் சட்டப் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனாலும் தொடர்ந்து மூன்று மாதங்கள் மாகாணசபை கூடாமலிருந்தால் அது தானாகவே கலைந்துவிடுமெனவும் சட்ட நிபுணர்கள் விளக்கம் கூறினர்.

இச்சமயத்தில் தாங்களே மாகாண சபையில் அடுத்த பெரும்பான்மைக் கட்சி என்றும் தங்களிடம் மாகாணசபை நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கேட்டது. ஆனால் பதினேழு உறுப்பினர்களை மட்டுமே கொண்ட இந்தக் காங்கிரஸ் கூட்டம் நடத்துவதற்கு இன்னும் எட்டுப் பேரைத் தேடிப் பிடிக்க வேண்டும்.

இதேசமயம் இலங்கையை விட்டு ஓடித்தப்புவதற்கு மூட்டை முடிச்சைக் கட்டிக்கொண்டிருந்த சமயத்திலும் வடக்கு கிழக்கு மாகாண சபையை தேசீய அரசியல் நிர்ணய சபையாக மாற்றி முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் சகாக்களும் தீர்மானம் நிறைவேற்றி ஈழப் பிரகடனத்துக்கு ஒரு வருட அவகாசம் கொடுத்தனர்.

வடக்கு கிழக்கு மாகாணசபை இப்பொழுது இல்லை என்றும் தேசீய அரசியல் நிர்ணயசபைதானிருக்கிறது என்றும் அது 'தேசீயப்பேரவை' என்றும் திரு. பெருமாள் கடைசி நேரத்தில் பிதற்றிக்கொண்டிருந்தார்.

இப்போது வடக்கு கிழக்கு மாகாண சபைக் கூட்டத்தை நடத்தப் போவதாக எங்கிருந்தோ திடீரென்று வந்து கொழும்பில் குதித்த அபுயூசுப் கூறுகிறார்.

மாகாண சபைக் கூட்டத்தை நடத்துவதற்கு அரசு பாதுகாப்புத் தர வேண்டுமென்றும் அவர் கூறுகிறார். மக்களால் தெரிவு செய்யப்பட்டது தங்கள் மாகாண சபையென்றும் கூறுகிறார்.

மக்களைப் பற்றியே சிறிதும் கவலைப்படாது கொள்ளையும் கொலையும் கடைசி நேரத்திலும் நிறைவேற்றி ஓடித்தப்பியவர்கள் எந்த முகத்தோடு வடக்கு கிழக்கு மாகாணத்துக்குள் வரப்போகிறார்கள்?

இவர்களுக்கு மாகாணசபை நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்ற விருப்பம் ஒன்றும் கிடையாது; நிர்வகிக்கும் தகுதியும் இவர்களுக்கு இல்லை.

விடுதலைப் புலிகள் தேர்தலில் நின்று வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தை ஏற்காமல் தடுப்பதே இவர்களின் நோக்கம். இதுவும் சொந்த மூளையாக இருக்குமென்பதும் சந்தேகமே!

"தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாக வேண்டும்" என்பதே கடை (கட்டியவர்களின்) கெட்டவர்களின் திட்டம். இது நிறைவேறுமா?

இவையாகும் இம் மூன்று கூட்டுத்தாபனங்களும் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன் தமது நாட்டின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ததுடன் லாபத்திலும் இயங்கின.

## மக்கள் மடல்

நாட்டு நிலை காரணமாக சில வருடங்கள் இவை குறிப்பிடத்தக்க லாபத்தை ஈட்டவில்லை என்பது உண்மையே. அதற்கான காரணம் இந்த அரசாங்கத்திற்குத் தெரியாததல்ல. இவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 30 ஆண்டு காலமாக வட கிழக்கில் வேறெந்த பாரிய தொழிற்சாலைகளையும் எந்த அரசாங்கமும் அமைக்க முன்வரவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ. தே. கட்சியும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

ஆனால் இன்றோ இருக்கும் தொழிற்சாலையொன்றிற்கு மூடுவிழா காண ஐ. தே. கட்சி அரசு தீர்மானித்துள்ளதாக அறியக் கிடக்கின்றது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை 1956 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆம் திகதி நிறுவப்பட்டது இங்கு (i) எரிசோடா, குளோரின் உற்பத்தியும் விற்பனையும், (ii) பக்க உற்பத்திப் பொருட்களான ஐதரோக்குளோரிக் கமிலம், நாகக்குளோரைட்டு, பெரிக்குளோரைட்டு, மேசை உப்பு ஆகியவற்றின் அபிவிருத்தியும், உற்பத்தியும், ற் பனையும் (iii) எரிசோடா திண்மம் இறக்குமதியும் விற்பனையும் என்பன நடைபெற்றன. இங்கு பல நூறு தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பெற்று வந்தனர்

பாதுகாப்புப் படையினரின் அறிவுறுத்தலின் பேரிலும், மந்திரிசபையின் அங்கீகாரத்துடனும் தொழிற்சாலையின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இதற்கான காரணம் 1985 சித்திரை மாதமளவில் நடந்த

திண்மம்) 622.81 மெற்றிக் தொன் குளோரினையும் இறக்குமதி செய்தது. விற்பனை வருமானத்திலிருந்து தொழிற்சாலை ஊழியர்களுக்குரிய சம்பளம் 1985, 86 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டது போல் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது.

1987 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கூட்டுத்தாபன செயற்பாடுகளின்படி வரிக்கு முன் தேறிய லாபமாக ரூபா 25, 767 மில்லியன் ஈட்டியுள்ளது. இந்த வகையில் 1986 ஆம் ஆண்டு ஈட்டிய வரிக்கு முன் தேறிய இலாபம் ரூபா 24.081 மில்லியன் ஆகும்

இத்தொழிற்சாலையின் எஞ்சிய பெறுமதியான பொருட்கள் கிளிநொச்சி பொலீஸ் நிலையத்திற்கும் ஆனையிறவு இராணுவமுகாமுக்கும் கொண்டு செல்லப்பட்டது அவைதற்போதும் அங்கேயே இருக்கின்றன.

தற்போதைய நிலைவரப்படி. இதனை மீண்டும் இயக்க முடியுமென இக்கூட்டுத்தாபனத் தலைவர் கூறியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது.

அப்படியிருந்தும் நிதி திட்டமிடல் அமைச்சர் இதனை மூடுவதற்கு முடிவெடுத்திருப்பதாக அறியக்கிடக்கின்றது.

இது பற்றி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றத்திலும் கடந்தாண்டு குரல் எழுப்பினர்.

ஆனாலும் மூடிவிடும் முடிவான முடிவென விஷயமறிந்தவர்கள் கவலையடைகின்றார்கள். புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்குப் பதில் இருக்கும் தொழிற்சாலையை மூட அரசுதிட்டமிட்டுச் செயல்படுவதை அனைத்துத் தமிழர் அமைப்புக்களும் எதிர்க்க வேண்டும். இல்லையேல் இரவோடிரவாக இது மூடப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ந சிவபாதம்
புத்தொளி
ஆனைக் கோட்டை

இனங்கள் ஒவ்வொரு இனமும் சமாந்திரமாக 33% வாழ்கிறார்கள் இந்தச்சனத்தொகை விகிதாசாரம் எப்படி ஏற்பட்டது என்பது பிறிதொரு கதை.

தமிழ் ஈழப் போராளிகளின் முக்கியகோரிக்கைகளில் ஒன்று அத்துமீறிய சிங்களக்குடியேற்றங்களாகும். தமிழரின் விகிதாசாரத்தைக் குறைப்பதற்காக வேண்டுமென்றே திட்டமிட்டு சிங்களவர் திருகோணமலைப்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ளார்கள் என்று தமிழர்கள் சாடுகிறார்கள். சிங்களவர்களை இங்கு குடியேற்றியதன் நோக்கம், தமிழரின் பலத்தைக் குறைத்து தமிழீழம் அமைப்பதைத் தடுப்பதாகும்.

1920ஆம் ஆண்டளவில் மிகச் சிறியளவினரான சிங்கள மக்கள் 1981இல் ஜனத்தொகைக் கணக்கெடுப்பதில் திருகோணமலையின் மொத்த ஜனத்தொகையில் 33% மாக அதிகரித்தனர் 1977 ஆம்ஆண்டுத் தேர்தலில் யூ. என் பி. திருகோணமலை மாவட்டத்தில் மூன்று தொகுதிகளில் இரண்டு இடங்களைப் பாராளுமன்றத்தில் பெறக்கூடியதாக அமைந்தது. எஸ். எல். எவ். பி ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியது. ரீ. யூ. எல். எவ் ஒருஆசனமும் இல்லாமல் போனது.

மாகாணசபைத் தேர்தலின் போது (1988) இரண்டுபெரிய சிங்களக் கட்சிகளும் தேர்தல் களத்திலிருந்து ஒதுங்கின.

ஆகவே ஈ. பி ஆர். எல் எவ். வும் மூஸ்லிம் காங்கிரசும் தமக்கிடையே ஆசனங்களைக் கூறுபோட்டுக்கொண்டு பெரும்பான்மை ஆசனங்களைப்பெற்றன. இப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களில்எண்ணிக்கையை விட அதிகமான இடங்களை முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக் கொண்டது தேர்தல் முடிவுகள் திருகோணமலையில் உள்ள இனவாத அரசியல் போக்கில் சிக்கல்களைத் துலாம்பரமாகக் காட்டுகிறது.

கோஸ்டல் கம்பனி என்று அழைக்கப்படும் அமெரிக்க கடல் கடந்த நிறுவனத்துக்கும் அமெரிக்க நிர்வாகத்துக்கும் ஏலவே எண்ணெய்கொள்வனவு தொடர்பாக ஒரு ஒப்பந்தம் இருந்தது இதன் பிரகாரம் சில எண்ணெய்க் கொள்கலன்களை தமக்குப் பிரத்தியேகமாக அமெரிக்கக் கடற்படைக்கு வாடகைக்குத் தரும்படி அமெரிக்க நிர்வாகம் வற்புறுத்தியது இவ் இழுபறியில் ஒப்பந்தமும் கைவிடப்பட்டது.

இந்நிலையில் எண்ணெய்க் கொள்கலன்களை மீளவும் செயற்படுத்துவதற்கு ஜே ஆர். ஜெயவர்த்தனா உலகெங்கிருந்தும் கேள்விப் பத்திரங்களைக் கேட்டிருந்தார். மிகக்குறைவான செலவினத்தைக் கேள்விப் பத்திரத்துக்குச் சமர்ப்பித்த இந்தியா, தன்னை அதற்குரிய ஒப்பந்தகாரராக ஏற்கும்படி இலங்கையை வற்புறுத்தியது. இந்த முயற்சியானது. இந்தியா நிரந்தரமாக திருகோணமலையில் நிலைகொள்ள வழி வகுக்கும். ஆனால், இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. ஆனால், எண்ணெய் வயல் வேலைகளை இலங்கையும், இந்தியாவும் கூட்டு முயற்சியாகச் செய்யலாம் என்பதில் இந்தியா அக்கறை கொண்டிருந்தது இக்கோரிக்கையையும் இலங்கை பிடிவாதமாக நிராகரித்தது.

இப்போது முறிவுற்றிருப்பதாகக் கருதப்படும் ஒப்பந்தத்தின் பிரச்சினைக்குரிய முக்கிய அம்சம் இந்த எண்ணெய் வயல்களாகும். இலங்கையில் முந்திய ஐக்கிய முன்னணி அரசு, திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் வெளிநாட்டுக் கப்பல்கள் விஜயம் செய்வதற்குத் தடை விதித்திருந்தது இத்தடையை 1982இல் ஜெயவர்த்தனா நிருவாகம் நீக்கியது. இந்நிலையிலேயே இன்றுவரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

சிவன் கோயிலில் பக்தி வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்க அதே கன்னாதிட்டி வீதியில் கோயிலிருந்து பத்துயார் தூரத்தில் சாராய வெள்ளமும் நள்ளிரவில் பாய்ந்து கொண்டிருந்தது!

இரண்டு மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில இப்படியொரு காட்சியைக் கற்பனை செய்திருக்க முடியுமா?

ஆறுமணிக்குப் பி குழந்தை அழும் சத்தம் கூட வெளியே வராமல் தடுத்த பயங்கர நிலையல்லவா?

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் மீண்டும் பரதநாட்டிய அரங்கேற்றங்கள், நூல் வெளியீட்டு வைபவங்கள் என்று எல்லாம் 'ஜாம ஜாம்' என்று விழாக் கோலம்தான்!

★

இதெல்லாம் சரிதான் யாழ்ப்பாண நகரில் பன்றிகளின தொகை அதிகரித்து வருவது மட்டுமல்ல அவற்றின் தொல்லைகளும் அதிகரித்து வருகின்றன.

வீதிகளில் ஓரிடத்தில் குவிந்து கிடக்கும் குப்பைகளைக் கிண்டிக்கிளறி வீதிகள் ஒழுங்கைகளை அசுத்தமாக்கி விடுகின்றன. சேறு சகதியை வீதிக்குக் கொண்டுவந்து அசிங்கமாக்குகின்றன!

பன்றிகள் சிலஇடங்களில் உதவியாக இருப்பதுண்டு. பெரும்பாலும் கட்டுப்பாடில்லாத பன்றிகளால் உபத்திரவம்தான்.

மூளைக்காய்ச்சல் பரவுவதற்குப் பன்றிளே காரணம் சமீபத்தில் தமிழ் நாட்டில் மூளைக்காய்ச்சல் உயிர்ப்பலியை எடுத்த போது பன்றிகள் கொன்றொழிக்கப்பட்டன.

பன்றிகள் இலாபம்தரும் பெரும் தொழில். அவை பண்ணையில் வளர்க்கப்பட வேண்டும். வீதிகளில் திரிய விடக்கூடாது.

ஈழநாதம்

# தேசிய ஒருமைப்பாடு அரசுடன் பேச்சு

# காலங்கடந்த கோரிக்கைகள்

## அபுயூசுப் யோசனைகளுக்கு அரச உயர் அதிகாரி பதில்

வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அபு யூசுப் நேற்று மு தினம் கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசும் போது, அரசாங்கம் தமக்கு பாதுகாப்பு ஒழுங்குகளை வழங்க வேண்டும் என்றும், தமது கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் ஈ.பி. ஆர் எல். எவ்வுடன் பேச்சுவார்த்தைகளுக்கு வரவேண்டும் என்றும் தெரிவித்தார், இது பற்றிக் கொழும்பில் அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் ஈ. பி. ஆர் எல். எவ் தலைவர்களைப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்த சமயம் தட்டிக் கழித்துவிட்டு டில்லிக்குச் சென்று இப்போது பேச்சுவார்த்தைகளுக்கு வருகிறார்கள் என்றும், பேச்சு வார்த்தைகளுக்கான அவர்கள் கோரிக்கை காலங்கடந்தது என்றும். இருந்தும் அவர்கள் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும் என்றார்.

தமது பத்தொன்பது அம்சக் கோரிக்கை தொடர்பா இலங்கை அரசு நிபந்தணையற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர முன்வர வேண்டும் என ஈ. பி, ஆர், எல், எல் நேற்று முன்தினம் அரசாங்கத்தைகேட்டுள்ளது.

ஈ, ஆர், எல். எவ் வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது வடக்குகிழக்குமாகாணசபைகூடுமா அல்லது கூடாதா என்பது பற்றி தமதுநேரத்தை வீணாக்குவதைத் தவிர்த்து, இலங்கையிலுள்ள பொறுப்பு வாய்ந்த அரசியல் வாதிகள் இலங்கை ஒன்றுபட்டிருக்குமா அல்லது பிரியுமா என்ற கேள்விக்கு விடை காண வேண்டும்.

அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணசபைகூட்டுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்ட பிறகு வடக்கு கிழக்கு மாகாண சபை கூடும் என்றும்,

சகல அரசியல் கட்சித் தலைவர்களும் சமய மொழி, கட்சிவித்தியாசங்களைமறந்து ஒன்றிணைந்த ஸ்ரீ லங்காவின தேசிய பிரச்சினைகான தேசிய ஐக்கியம், ஸ்ரீலங்காவிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கான மாநில சுயாட்சி முறையில் அமைந்த சுயநிர்ணய உரிமை ஆகியவற்றிற்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஈ. பி. ஆர்.எல்.எவ் அறிக்கை கூறுகிறது.

## அரச எழுதுவினைஞர் சங்க மட்டக்களப்பு கிளை கூட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செயலகத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்க மட்டக்களப்பு கிளையின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் திரு. அ. தம்பாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அரசின் கெடுபிடிகளால் தொழிற்சங்கங்களின் குரல்வளை நசுக்கப்பட்டதாலும், நாட்டின் அண்மைக்கால சம்பவங்களாலும் இச்சங்கம் செயற்பட முடியாதிருந்ததாக திரு தம்பாப்பிள்ளை தமது தலைமையுரையில் கூறினார்.

பதினொரு வருடங்களின் பின்னர் இச்சங்கம் செயற்படத் தொடங்கியமை தமிழ் அரசாங்க எழு வினைஞர்களுக்கு மட்டுமன்றி ஏனைய தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் ஓர் வரப்பிரசாதம் என்றும் அவர் மேலும் கூறினார்

தாய்ச் சங்க பொதுச் செயலாளர் திரு. செ. பரராசசிங்கம் உட்பட பலர் உரையாற்றினார்கள்

பு வருட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

## எமது கல்வி. ...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறவேண்டும் என்ற நிலையும், பி தங்கிய பிரதேசங்களுக்கும் குறைந்த புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகத்தேர்வு என்ற நிலையில் அப்பிரதேச மாணவர்கள் பாடசாலையில் வரவைப் பதிந்துவிட்டு நகரப்புரங்களில் உள்ள ரியூசன் நிலையங்களில் கல்வி சற்கப் படையெடுத்தாலும், போட்டிப் பரீட்சைக்குத் தம்மைத் தயாராக்க வேண்டும் என்ற எண்ணம்

## காத்தான்குடியில் வெள்ள நிவாரணம்

(காத்தான்குடி)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கு விரைவில் வெள்ள நிவாரணம் வழங்கப்படும்.

## பேராசிரியர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கமிரா ஒன்றையும் துணிமணிகளையும் இந்தச் சிப்பாய் எடுத்துச் சென்றார் எனப் பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

பயாகலையிலுள்ள பேராசிரியரின் வீட்டுக்கு சென்ற சிப்பாய் பேராசிரியரின் னைவியைக் கொலை செய்வதாகப் பயமுறுத்தி ரூ. 50,000 கேட்டுள்ளார். இச்சம்பவத்தின் போதும் பேராசிரியர் வெளியில் சென்றிருந்தார்.

பணத்தை ஒரு கிழமைக்குள் தராவிட்டால் பேராசிரியரையும் அவர் குடும்பத்தினரையும் கொலை செய்யப்போவதாகச் சிப்பாய் சொன்னதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

## இவர்களுக்கு ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படியை தனது ஊழியர்களுக்கு வழங்கி வருகிறது.

மேலும் இச்சங்க நிர்வாகம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல் சகல படிகளையும் தனது ஊழியர்களுக்கு வழங்கி வருகின்றதும் குறிப்பிடத்தக்கது (15)

## படகு விளையாட்டு இயமனானது

(பொத்துவில்)

நண்பர்களுடன் படகு செலுத்தி நீரில் விளையாடிய 13 வயது பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி பரிதாபகரமாய் மரணமானார். இச்சம்பவம் பொத்துவிலில் இடம்பெற்றது,

பொத்துவில் முஸ்லிம்மஹா வித்தியாலய 9 ஆம் ஆண்டு மாணவனான அஸ்ரப் என்பவரே இவ்வாறு மரணமானவராவார், (54)

## மகளை அடித்து கொலை செய்ததந்தை

வீட்டைச் சுத்தம் செய்ய மறுத்த பத்து வயதுச் சிறுமியை தரையில் அடித்துக் கொன்ற தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர்

இச்சம்பவம்குடவில்ல என்ற இ த்தில் இடம்பெற்றுள்ளது. அயலவரின் சாட்சியத்தையடுத்து மாரவில்ல நீதிவான் தகப்பனாரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்

## ஹெல்மட்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சவுதிக்கு வாகனச் சாரதி




அரசாங்க ஆஸ்பத்திரிகளில்

## மயக்க மருந்து கொடுக்க தாதிமாருக்கும் பயிற்சி

(கொழும்பு)

நாட்டில் உள்ள பெரியாஸ்பத்திரிகளில் சத்திர சிகிச்சையளிப்பதற்கு முன்னர் நோயாளிகளுக்கு உணர்விழக்கச்செய்யும் மயக்க மருந்து கொடுப்பதற்கு தாதிமாருக்கும் பயிற்சியளிக்கப்படவுள்ளது!

இந்த ஆஸ்பத்திரிகளில் மயக்க மருந்து கொடுப்பவர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டன மயக்க மருந்து கொடுப்பவர் ஒருவர் இரண்டு மூன்று ஆஸ்பத்திரிகளுக்கு தற்போது செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தாதிமார் சங்கத்துக்கு சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

## பாகிஸ்தான் அரிசி வெள்ள நிவாரணம்

(காத்தான்குடி)

காத்தான்குடி உதவி அரசாங் அதிபர் பிரிவில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பாகிஸ்தான் அரசு விசேஷ நிவாரணம் வழங்கியுள்ளது.

சமூக சேவைகள் ணைக்களத்தினூடாக கிடைக்கும் இந்நிவாரணம் அரிசியாக வழங்கப்படும் இதற்கென பத்தாயிரம் கிலோ அரிசி இப்பிரதேசத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு பத்து கிலோ வீதம் பகிர்ந்தளிக்கப்படும். இப்பிரதேசத்தின் 'கஷ்டப் பிரதேசம்' என அழைக்கப்படும் ஜன்னத் மாவத்தை மக்களில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நூறு குடும்பங்களுக்கு இந்நிவாரணம் வழங்கப்படும், (55)

## ஏழு வருட காலத்தின் பின் மட்டு.நகர் - மன்னார் பஸ்சேவை

(களுவாஞ்சிக்குடி)

மட்டக்களப்பிலிருந்து மன்னாருக்கான பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

கடந்த ஏழு வருட காலத்தின் பின்னர் இந்தச் சேவை மட்டக்களப்பு டிப்போவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் காலையில் புறப்பட்டு வாழைச்சேனை, பொலநறுவ, அனுராதபுரம், மதவாச்சி, செட்டிகுளம், முருங்கன் ஆகிய இடங்களினூடாக மன்னாரைச் சென்றடையும்.

இதனால் மன்னார்ப் பகுதி வர்த்தகர்கள் பெரிதும் பயன் பெறுகின்றனர்.

கடந்த காலங்களில் இவர்கள் ...

பின்னர் மட்டக்களப்பு பஸ்ஸைப் பிடிக்க வேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சம்பிரதாய பூர்வமாக திருமணம் செய்தவர்கள்சட்டபூர்வமாக்கவும்

(சுதுமலை)

கடந்த காலங்களில் சம்பிரதாய பூர்வமாக திருமணம் செய்துகொண்ட பலர் தம்பதியினர் தமது திருமணத்தை சட்டபூர்வமாகப் பதிவு செய்ய யாழ் பதிவாளர் அலுவலகத்திற்கு தினமும் வருகின்றனர்.

இந்திய இராணுவம் இருந்த காலத்தில் சில இடங்களில் ...தால் சமய முறைப்படியே இத்திருமணங்கள் நடைபெற்றன.

இதனையடுத்து இவர்கள் தமது திருமணப் பதிவுகளை சட்டபூர்வமாகப் பதிவு செய்ய இங்கு வருகின்றனர்.

காணிப்பதிவு அலுவலகத்தில் திருமணப்பதிவாளராக திரு. பொ. ஈஸ்வரதாசன்

கல்வி சிறக்கப் படைக்கப்படுகிறது என்றாலும், போட்டிப் பரீட்சைக்குத் தம்மைத் தயாராக்க வேண்டும் என்ற எண்ணம் மாணவருக்கும் எமது பிள்ளையைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்புவதே 'தந்தை மகனுக்கு ஆற்றும் உதவி'' என்ற மனோ நிலையும் பெற்றோருக்கு வளரவே ரியூசன் கல்வி ஆண்டு 1ஆம் வகுப்பிலிருந்து எல்லாவகுப்புகளுக்கும் வளர்ந்து விட்டது. ஒரு பிள்ளைக்கு ஒரு தனியார் பாடசாலைக்கல்வியல்ல. ஒரு பிள்ளைக்கு ஒரு பாடத்துக்கு 5 நிலையங்கள் என்ற நிலையிலும் அதிகாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணிவரையிலும் ரியூசன் என்றும் வளர்ச்சியடைந்துள்ளது

அது மட்டுமன்றி ரியூசன் ஆசிரியர்களாக க.பொ.த. சாதாரணம், க.பொ.த,உயர் தரம் கற்ற பலரும் ஆசிரியராகிவிட்டனர். காரணம் ஆசிரியர் தேவை அதிகரித்ததே யாகும்,

கடந்த இருபதுவருடகாலத்தில் ரியூசன் கண்ட வளர்ச்சியோ வளர்ச்சி. இன்று ஏறக்குறைய 70 வீதமான பெற்றார் தமது பிள்ளையின் கல்வி ரியூசனிலேயே தங்கியுள்ளது. என்று கருதுகின்றார்கள் இவர்களுள் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் கல்விஅதிகாரிகள்யாவரும் உள்ளடங்குவார்கள். இக் கல்வி வளர்ச்சியில் யாவரும் பங்குபற்றியுள்ளார்கள் என்றால் மிகையாகாது. ஏனெனில் ரியூசன் ஆசிரியராகவும் ரியூசனுக்கு பிள்ளைக்கு காசு வழங்கும் தந்தையாகவும் ஆசிரியர்களைப் பாடசாலை வேளையிலும் லீவு வழங்கியும் வழங்காமலும் அனுப்பிய அதிபராகவும் ரியூசன் விளைவுகளைத்தூர நோக்கில் சிந்திக்காது அதன் போக்கிலே விட்ட பெருமையும் யாவரையும் சாரும்.

சுப்பிரமணியம்

பட்ட காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கு விரைவில் வெள்ள நிவாரணம் வழங்கப்படும்.

சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது மத்திய அரசாங்கம் இந்நிவாரணத்திற்காக ஏறத்தாழ இரண்டு லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

காத்தான்குடி 6ஆம் குறிச்சி ஜனசக்திக் குழுவினரால் முன்னுரிமையளிக்கப்பட்ட 162 குடும்பத்தினருக்கு 17,612 ரூபாய் பெறுமதியான நிவாரண உணவுப் பொருட்கள் காத்தான்குடி ப.நோ.கூ சங்கம் மூலமாக வழங்கப்படும் என அப்பகுதி கிராம உத்தியோகஸ்தர் ஜனாப் ஏ.எல் எம் இபுறாலெப்பை தெரிவித்தார். (55)

### காத்தான்குடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வீட்டுத் திட்டம் இரு கட்டங்களாக நிறைவேற்றப்படும். முதற் கட்டமாக அறுபது வீடுகள் காத்தான் குடி 6ஆம் குறிச்சி கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் முதலில் ஆரம்பித்துவைக்கப்படும் (55)

### இலங்கை...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலைத் துறைமுகம் செயற்படுகிறது.

எனவே திருக்கோணமலை என்று மறுபெயரில் ஓர் மலையின் பெயரால் வழங்கப்படும் Trincomalee யை தமதாக்கிக் கொள்ள பலர் ஏன் விரும்புகிறார்கள்என்பதில் ஆச்சரியமில்லை. இன்று ஒல்லாந்தரால் கட்டப்பட்ட பிறெட்டறிக் கோட்டை நகரின் காவல் நிலையமாக வருத்தம் தோய்ந்த கௌரவத்துடன் தலை நிமிர்ந்து நிற்கிறது.

(நன்றி: The Independent)

தாகச் சிப்பாய் சொன்னதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

சந்தேக நபரான சிப்பாய் பணத்தைப் பெற வீட்டுக்கு வரும் திகதியை பேராசிரியர் மூலம் அறிந்திருந்த பயாகலைப் பொலிஸார் பேராசிரியர் வீட்டில் பதுங்கியிருந்துள்ளனர். சிப்பாயை பொலிஸார் மடக்கிப் பிடிக்க முயற்சித்த சமயம், சிப்பாய் சுழல் துப்பாக்கியைத் தம் பக்கம் நீட்டியதால், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி நேர்த்ததாகப்பொலிஸார் தெரிவித்தனர்.

தான் இராணுவத்தைவிட்டு வெளியேற உள்ளதாகவும் அதற்குமுன் பணத்தைச் சேர்க்க எண்ணி களவில் ஈடுபட்டதாக சிப்பாய் விசாரணையின் போது பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

### வடி சாராய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

வவுனியாபொலிசாரும் சசிப்பைத் தடை செய்வதில் அதிக அக்கறை எடுத்துள்ளனர் இதனால் மடுக்கந்த, மயிலங்குளம் போன்ற சிங்களக் கிராமங்களில் வாழும்வடிசாராயப்பாவனையாளர்கள் இலேகியத்தை உபயோகிக்க ஆரம்பித்துள்ளனர்.

இதன் காரணமாக மேற்படி கிராமங்களில்இலேகியத்திற்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(தி)

### கொழும்பு ..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பொருட்களை ஏற்றவும், இறக்கவும் முடியுமெனவும் அவர் கூறினார்.

கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே பல கப்பல்கள் பொருட்களை ஏற்றவும் இறக்கவும் பல நாட்களாக நிற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஹெல்மட்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சவுதிக்கு வாகனச் சாரதியாக தொழிலுக்குச் சென்று அங்கு விபத்தில் சிக்கி இறந்துள்ளார் செத்தவருக்கு வரவேண்டிய நஷ்டஈட்டுப் பணம் தான் அஸீஸ்சுக்கு வந்துள்ளதாம்.

சவுதியில் இறந்தவரை இனங்காணும் முயற்சியில் கெய்ரோப பொலிசார் ஈடுபட்டுள்ளார் என்று அங்கிருந்து வரும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

### சண் பத்திரிகைச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியற் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் மறுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் சண் பத்திரிகையில் வெளியான இச் செய்திக்குக்கொழும்பில் மறுப்புத் தெரிவித்ததோடு யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் இப்பேட்டியைத் தான் வழங்கவில்லை என்று மறுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

### வடக்கு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

முன்னணியின் சார்பில் முன்னணியின் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் யோகரத்தினம் யோகி, சுரேஷ் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், கிழக்கு மாகாண அரசியல் பொறுப்பாளர்கள் ரூபன், கரிகாலன், காஸ்ட்ரோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தின் முக்கியமான பல பிரச்சினைகள் நேற்றுமுன்தினம் இரவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருக்கும் நீதி அமைச்சரும் சமாதானக் குழுத்தலைவருமான ஜனாப் ஏ ஸி.எஸ். ஹமீதுக்குமிடையில் நள்ளிரவு வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் அலசி ஆராயப்பட்டது குறிப்பிட்டது.

வர்த்தகர்கள் பெரிதும் பயன்பெறுகின்றனர்.

கடந்த காலங்களில் இவர்கள் அனுராதபுரம் வந்து அங்கிருந்து பொலநறுவ போய்

### அன்னை பூபதிக்கு அஞ்சலி

(வட்டுக்கோட்டை)

அன்னை பூபதி நினைவாக மூளாய் வீதியல் கண்ணகை அம்மன் வீதியில் திரு.ஆ ஐயர் தலைமையில் உண்ணாவிரதம் மேற் கொண்டபோது காலை 9 மணியளவில் நூற்றுக்கு மேற்பட்ட பிரமுகர்களும் ஆயிரக்கணக்கான தமிழ் அபிமானிகள் குழந்தைகள் கலந்து கொண்டு அன்னை பூபதியை விடுதலை கீதங்களுடன் அஞ்சலி செலுத்தினார்கள். (47)

### தமிழ்நாட்டில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திக்கு அருகே நேற்று முன் தினம் ஏற்பட்ட விபத்திலே லொறி ஒன்று பேரூந்துடன் மோதி, அதிலிருந்த வாய்க்கால் ஒன்றில் வீழ்ந்ததால் அதிலிருந்த மூன்றும்பர் உயிர் இழந்தார்கள். வேறு எட்டுப் பேர் காயமடைந்து செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள்,

### மண்ணிற்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்கள். முல்லைத் தீவு மாவட்டப் பொறுப்பாளர் திரு. திவாகர் புலிகொடி ஒன்றினை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். வலி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரனும் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள முன்னணியின் முக்கிய பிரமுகர்களும் உரையாற்றினார்கள். விழாவின் இறுதியிலே கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவ்விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்கள்

றனர்.

இந்திய இராணுவம் இருந்த காலத்தில் சில இடங்களில் இறப்பு பிறப்பு விவாகப் பதிவு அலுவலகங்கள் நடைபெற முடியவில்லை என்ப

காணிப்பதிவு அலுவலகத்தில் திருமணப்பதி வாளராக திரு. பொ. ஈஸ்வரதாசன் விசேட அனுமதி பெற்று இந்தப் பதிவுகளை செய்து வருகின்றார்.

# நெல் விலை வீழ்ச்சி ஆனால் அரிசி விலை குறையவில்லை

(வவுனியா)

வவுனியாவில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்தபோதிலும் அரிசியின் விலை குறையவில்லை. இதன் காரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

நெல் கொள்வனவு செய்யும் கடைகளில் கடந்தகால போக காலத்தில் ஒரு மூடை நெல்லின் விலை கிட்டத்தட்ட 750/- ரூபாவாக இருந்தது. வவுனியா விவசாயிகளில் பலர் மேற்படி கடைகளிலிருந்து நெல் விதைப்பிற்காகக் குறிப்பிட்ட விலைக்குக் கொள்வனவு செய்தனர். இன்று அதே விவசாயிகள் தாம் அறுவடை செய்த நெல்லை 500 ரூபாவிற்குக் குறைவாகவே விற்பனை செய்கின்றனர்

கால போக காலத்தில் 14 ரூபாவாகக் கடைகளிலும், கூட்டுறவுச்சங்கங்களிலும் விற்பனை செய்யப்பட்டுவந்த அரிசி இன்று அதே விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று அரிசி கொள்வனவு செய்யும் பாவனையாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாப் பகுதி வியாபாரிகளாலும், அரிசியாலை உரிமையாளர்களாலும் நெல்லின் விலை உயர்ந்து அரிசியின் விலை வீழ்ச்சியடைந்திருப்பதாக மேற்படி பாவனையாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர். (தி)

### முக்கிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆரம்பமான பேச்சுவார்த்தைகள் நீடித்தது.

இந்தியப்படைகள் இலங்கையிலிருந்து வெளியேறிய பின் இருதரப்பினருக்குமிடையில் நடைபெற்ற முக்கியமான சந்திப்பு இதுவாகும்.

### வேலணையில்!

(தீவுப்பகுதி)

அன்னை பூபதி எமது இனத்திற்கு மாபெரும் சிறப்பைத் தேடித் தந்துள்ளார். அவரது புகழ் தமிழ் ஈழம் உள்ளவரை என்றென்றும் நிலைக்கும். எமது எதிர்காலத்திற்காக, எமது பிள்ளைகள் நித்திரையின்றி, உணவின்றி, காடுகளிலும், மழையிலும், வெய்யிலிலும் போராடி வந்தார்கள். ஆனால் நாம் பேசாது வீணே காலத்தைப் போக்கி வருகின்றோம்.

எமது இளைஞர்கள் படும் துன்பங்களில் நாம் பங்கேற்க வேண்டும். அன்னை பூபதி பெண்ணினத்திற்குப்பெருமையைத் தேடித் தந்துள்ளார்.

மேற்கண்டவாறு வேலணையில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய தீவுப்பகுதி மாதர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி பத்மாவதி திருஞானசெல்வம் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு திரு.கை. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். வேறு பலரும் பேசினர். (15)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது